www.tamilarangam.net

Kaya

RAYA
87 RUE DE COLOMBES
92000 ASNIERES SUR -
[illegible] FRANCE



# மனிதம்

6 யூலை , ஓகஸ்ட் 90

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு இளவேனிற் காலைப்பொழுது

இளவேனில் முதிருமொரு நீண்ட பகற்பொழுதின்
முன்காலை வானவெளி
முகிலின்றி நீலமாய் விரியும்.
காற்றும் பனிமழையும் கடுங்குளிரும்
நீண்ட இரவுகளும்
தீய கனவென்று
மரங்கள் தளிர்த்து மலர் உதிர்க்கும்.
செட்டை திருத்திச் சிலிர்த்துலுப்பிச்
சிறகு விரித்து
எழுகின்ற பறவையுடன்
மெல்ல எழும் நெஞ்சு.
நீல நெடு விரிப்பில்
மறப்பாகக் கோடிரண்டு
கிழித்தோடும் விமானங்கள்.
வெய்யில் எறித்து வேகாத வீதிகளில்
மானுடரை மானுடர்கள் சுட்டெரிக்கும் தாய்நாட்டின்
நினைவு கனத்துக்
கீழிறங்கும் என் நெஞ்சு.
விமானஞ் சுட்ட வெள்ளைப் புகை வடுக்கள்
காற்றுக் கலக்கக் காலத்திற் கரைந்தழியும்,
மிடுக்கோடு
மீண்டும் எழும் நெஞ்சு.

— சிவா —

www.tamilarangam.net

# மனிதம்!



மீண்டும்...
வெலிக்கடை சிறைக்கு
விண்ணப்பம் நிரப்பலாம்!
பூசா முகாம்
புனரமைக்கப்பட்டதாய்
சேதி வரலாம்...
மண்ணில் மக்களுக்கு உரிமையில்லை
மயானத்தில் தான் உரிமை என்று
ஒப்பந்தம் நிறைவேறலாம்!

பகீரதன்

மீண்டும் எமது மண்ணில் யுத்தம்!

சிறிது காலம் நிலவிய அமைதியும் சிதறிப் போனது... ஆம்: கடந்த யூன் மாதம் 10ம் திகதி இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தொடங்கிய யுத்தம் இன்னமும் ஓயவில்லை.

இந்த அமைதி நிலையை குலைத்துக் கொண்டு வெடித்த இந்த திடீர் யுத்தம் பற்றி பல அபிப்பிராயங்கள் இன்று பலராலும் கூறப்படுகின்றன.

இந்தியப்படை வெளியேறிய காலத்தில் இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையே ஆரம்பித்த பேச்சு வார்த்தை பல கட்டங்களில் முன்னேறியதைத் தொடர்ந்து « புலிகள் எங்கள் நண்பர்கள் இனிமேல் எங்களுக்கு எதிராக ஆயுதத்தை திருப்ப மாட்டார்கள் » என்று அரசின் பக்கத்திலும், « கடந்த கால சிங்களத் தலைவர்களால் தான் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காண முடியாமல் போனது

www.tamilarangam.net



ஆனால் ஜனாதிபதி பிரேமதாசா நம்பத்தகுந்தவர் என்று புலிகளின் சார்பிலும் அறிவிக்கப்பட்ட அறிக்கைகளும் பேட்டிகளும், கூடவே இந்தியப்படை வெளியேற்றத்தில் பிரேமதாசா கொண்ட நிலைப்பாடும் பிரேமதாசா பிரச்சனைகளைத் தீர்க்கக் கூடியவர் என்ற பிரமையைத் தோற்றுவித்தது.

அதே வேளையில் சமாதானப் பிரியனாகவும், ஜனநாயக வாதியாகவும் தன்னை காட்டிக் கொள்ள முனையும் வெள்ளை உடை தரித்த வேடதாரியான பிரேமதாசா மறுபுறத்தில் அரசை விமர்சிக்கும், அம்பலப்படுத்தும் ஜனநாயக வாதிகளை J.V.P அழிப்பு என்ற போர்வையில் தனது இரகசிய கூலிப் படைகளைக் கொண்டு அழித்தொழிப்பது அரசின் பாசிச முகத்தை அம்பலப்படுத்துகிறது.

யுத்த அனர்த்தங்களால் நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகளை தவிர்ப்பதற்காக வேண்டி; வெளிநாட்டு உதவிகளை பெறுவதற்காக தற்காலிகமாக நாட்டில் அமைதியை நிலைநாட்ட வேண்டிய தேவையின் அடிப்படையில் புலிகளுடன் எப்படியாகிலும் சமரசத்துக்கு வந்தது அரசு. புலிகளின் தரப்பில் இந்திய இராணுவ வெளியேற்றத்திற்கும், வேண்டிய அதன் பின் தம்மை ஓர் மீள் தயாரிப்பு செய்வதற்கும் அவகாசமே இந்த, இடையில் ஏற்பட்ட யுத்த நிறுத்தம் என்பது தெளிவாகிறது.

இந்த இடைக்கால பேச்சுகளில் புலிகள் முக்கிய நிலைப்பாடுகளில் உறுதியாக இருந்ததையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக சிறுபான்மை இனத்தின் பாதுகாப்பு, ஆறாவது திருத்தச்சட்டம், மாகாணசபையை கலைத்தல், புதிய தேர்தலை நடாத்துதல் போன்ற கோரிக்கைகளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலைப் புலிகள் முன் வைத்ததும் இக் கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொண்டதும் கவனிக்கத் தக்கது.

அரசின் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்த காலங்களிலேயே வி. புலிகள் தம்மை மீளமைப்பதிலும், இராணுவ ரீதியிலான தயாரிப்புக்களிலும் ஈடுபடுத்தி வந்தமை அரசை உறுத்தி வந்தது. இருப்பினும் இந்தியப் படை வருகையின் போது வட கிழக்கில் தனது படைகளின் பலத்தை குறைத்திருந்த இலங்கை அரசு வெளிப்படையாக மீண்டும் படைகளின் பலத்தை வட-கிழக்கில் குவிக்க முடியாத நிலையில் இருந்தது. பேச்சு வார்த்தைகளில் இறுக்க நிலையைத் தொடர்ந்து வட-கிழக்கில் தனது படைகளை குவிப்பதற்கான முயற்சிகளைத் தொடங்கியது.

மறுபுறம் விடுதலைப் புலிகளைப் புகழ்ந்து கொண்டே << நாம் எல்லா இயக்கங்களையும் சமமாக மதிக்கிறோம் >> எனக் கூறிக் கொண்டு மாகாண சபையைக் கலைப்பதற்கான சிக்கல்களை நோக்கமாகக் கொண்டோ, அல்லது வேறு காரணங்களுக்காகவோ E.P.R.L.F போன்ற அமைப்புக்களுடன் பேச்சு வார்த்தையை தொடங்கியது. இந்தப் போக்கு புலிகளின் பக்கத்தில் சீற்றத்தை ஏற்படுத்தியது. புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஏற்பட்ட விரிசலின் இடத்தை நிரப்ப, அரசானது E.P.R.L.F போன்ற இயக்கங்களை அரவணைத்ததும், தமிழகத்தில் அதன் தலைவர்களின் படுகொலையாக எதிரொலித்தது.

அரசின் மாறுதலான போக்கும் படைகுவிப்பையும் தொடர்ந்த சிறு பிரச்சனையில் புலிகளால் தொடங்கப் பட்ட இந்த யுத்தத்தின் அழிவுகளை நியாயப்படுத்தவும் 'புலிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தான் சமாதானத்தை விரும்பவில்லை, பிரச்சனையை தீர்க்க விரும்பவில்லை" என்ற பிரச்சாரத்தை வெளி நாடுகளில் மேற்கொள்ள இலங்கை அரசுக்கு வாய்ப்பாகிப் போனது.

தமிழ் மக்களின் அழிவுகளை மூடிமறைக்க தமது 'யுத்தம் புலிகளுக்கெதிரானது தான், தமிழ் மக்களுக்கெதிரானது அல்ல' என அரசு தெரிவித்திருந்தாலும் « கிழக்கு மாகாணத்தை பிரிப்பதற்கான அரசின் திட்டமிட்ட சதிதான் இந்த யுத்தம் » என முஸ்லீம் காங்கிரஸ் M.P கூறியிருப்பது அரசின் உள்-நோக்கத்தை கோடிட்டு காட்டுகிறது.

மேலும் இந்தியப்படை வெளியேற்றத்தைத் தொடர்ந்து இலங்கை அரசு-புலிகளின் உறவு, மாகாணசபைக்கு போட்டியாக இருந்த அமைப்புகளின் வெளியேற்றம், பிரேமதாசா ஆறாவது திருத்தச் சட்டத்தை நீக்குவதாக உறுதியளித்தலும்; தங்களுக்கும் அரசுக்கும் இருந்த பேதம் நீங்கியதாக புலிகள் வெளிப்படையாக அறிவித்தமை போன்ற நிகழ்வுகளின் பின்னர் ஏற்பட்ட இந்த திடீர் யுத்தம் இந்த நேரத்துக்குரியது தானா? என்ற கேள்வி சிந்தனைக்குரியது.

**ASSOCIATION DES ECRIVAINS TAMOULS DANS L'EUROPE**

**ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்**

**VERBAND DER TAMILSCHEN SCHRIFTSTELLER IN EUROPE**

ASSOCIATION OF TAMIL WRITERS IN EUROPE

ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் தனிநாயகம் அடிகளார் நினைவாக சர்வதேச ரீதியாக நடாத்திய சிறுகதைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. இலங்கை, இந்தியா, மலேசியா நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள் பரிசுக்குரியவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். மேலதிக விபரங்கட்கு---


A . E . T . E . 89, 93600, Aulnay Sous Bois, FRANCE. Tel. 48790020

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுவிஸ் : நிறவெறியா ? நீரவெறியா ?




அகதிகள் வெளிநாட்டவர் மீதான நிறவெறியர்களினதும், தேசிய அதிதீவிர வலதுசாரிகளினதும் தாக்குதல் சுவிஸ்சலாந்தில் அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. இவ்வகையில் கடந்த JUNE மாதம் 5ம் திகதி செங்காலன் (St Gallan) கன்ரோனில் ரோசாக் எனும் இடத்தில் அதிகாலை 02.45 மணியளவில் கூட்டமாக நடைபாதையில் சென்று கொண்டிருந்த பங்காளதேஷ் அகதிகள் மீது காரில் சென்று கொண்டிருந்த நிறவெறியர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இத்துப்பாக்கிச் சூட்டிற்கு ஓர் பங்காளதேஷ் அகதி படுகாயமுற்றார். பலபத்திரிகைகள் தமிழ் அகதிமீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாக செய்திகள் வெளியிட்டிருந்தன. இரண்டு தினங்களுக்குப்பின்னர் சூட்டுக்காயத்திற்கு இலக்காகியவர் பங்களாதேசத்தவர் என பத்திரிகைகள் உறுதிப்படுத்தின. இச்சம்பவத்தினை நேரில் கண்ட TAXI ஓட்டுனர் காரின் இலக்கத்தினை பொலிசாருக்கு அறிவித்திருந்தார். இத்தகவலின் துணைகொண்டு காரினை அம்ரிஸ்வில் (Amriswil) என்னும் இடத்தில் வெறுமையாக கைப்பற்றினர். இதைத்தொடர்ந்து இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களின் வயது விபரம் 22, 23 ஆகும். விசாரணையின் போது தாம் சம்பவதினம் மது போதையில் இருந்ததன்

www.tamilarangam.net



அச்சம்பவம் நேரிட்டது எனவும் தாம் நிறவெறியர்கள் அல்ல என வாக்குமூலமளித்தனர். இவ்வாக்குமூலத்தை கிளிப்பிள்ளைகள் போல் பத்திரிகைகள் ஒப்புவித்தன. ஆனால் Bern இல் வெளியாகும் "Berner Tagwacht" எனும் பத்திரிகை மேல் காணப்படும் கார்ட்டூனையும் பிரசுரித்து, இச்சம்பவத்தினை வன்மையாகக் கண்டித்திருந்தது.

இன்றோர் Fribourg இல் ஓர் குர்டிஸ்தானியர் நிறவெறியனின் கத்திக்குத்துக்கு இலக்காகி பலியானார். இச்சம்பவத்தினையும் பல பத்திரிகைகள் இது ஓர் நிறவெறிச் செயல் அல்ல எனவும் நிறவெறியனின் வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருந்தபடி கைகலப்பில் ஏற்பட்ட தற்செயல் விபத்து என காரணம் கற்பித்தனர். இந் நிறவெறியனின் சகோதரன் "தனது சகோதரன் வெளிநாட்டவர்களிற்கு எதிரானவர் அல்ல" எனவும் "அவன் ஓர் சாதாரண சண்டியன்" என கௌரவமான ஓர் காரணத்தை கூறி நழுவிக்கொண்டான். ஐரோப்பிய நாடுகளில் வளர்ந்து வரும் புதிய நாஜிகளினதும் அதிதீவிர வலது சாரிகளினதும் பிரச்சாரத்தினை சாதாரண மக்கள் கூட ஏற்றுக்கொள்ளுமளவிற்கு நிலைமை மாறிவிட்டது. இவ்வாறு தொடரும் நிறவெறித்தாக்குதல்களை நிறவெறி அல்ல என காரணம் கற்பிக்க பலமான தகவல் தொடர்பு சாதனங்கள் இருக்கும்போது நிறவெறியர்கள் தாம் மேற்கொள்ளும் வன்முறைக்கு காரணம் தேடி அலையவேண்டியதில்லை என்பதையே இச்சம்பவங்களும் பத்திரிகைச் செய்திகளும் எடுத்துக்காட்டுகின்றன.

▸ ம.நரேந்திரன் ◂

அட்டைப்படம்;

நன்றி: THE ISLAND (25.03.90)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்புடன் .......

• யதார்த்தினி •

அன்புள்ள அண்ணாவிற்கு
நலம்.
காசு கடன்கள் தீர்ந்தது.
அம்மாவிற்கு
கண்ணீர்க் கடன் அதிகமுள்ளது.

செத்த வீடுகள் அதிகம்
சேதிகள் அறிந்திருப்பாய்

எதற்கும்
ஓ... என்று கத்துவாள்
அம்மா.
முன்பெல்லாம்
நீ சொல்லுவாய்
கத்தி... மானத்தை வாங்காதே என்று
ஆனால் இங்கே
மானம் போனால் கூட
கத்த முடியாது.

★ ★ ★

Nur Für Freundkreis

சந்தா விபரம்
தனிப்பிரதி - 3 SFr
சுவிஸ் உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கு
ஒரு வருடம் : 20 SFr
ஆறு மாதம் : 10 SFr
(தபால் செலவு உட்பட)

வாசகர்களே!
விமர்சனங்களையும்
ஆக்கங்களையும்
வரவேற்கிறோம்!
• ஆ-ர் குழு •

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்ணடிமைத் தனமும் பெண் நிலை வாதமும்

க.தீபன்

*சென்ற இதழில் எமது சமூகத்தில் பெண்கள் வகிக்கும் பாத்திரம் பற்றியும் வரலாற்று ரீதியான உண்மைகள் சில-வற்றையும் பார்த்தோம்.*

மொத்தத்தில் எமது சமூகத்தில் ஆண்களுக்குப் பணிவிடை செய்வதே பெண்ணின் முக்கிய கடமையாகிறது. இந்தக் கடமைகளை முழுமையாகச் செய்யாதபோது அவள் தகுதியற்ற பெண்ணாகக் கருதப்படுகிறாள். இன்று எமது பெண்களைக் கொடூரமாக அழுத்தும் வேதனைக்குரிய நோய் சீதனம்! எமது தேசத்தில் விடுதலைக்கான யுத்தம் நிகழ்ந்திருந்தாலும் சமூக நிலைமைகள் முன்பைவிட மோசமான இழுக்கல்களையே கொண்டுள்ளது என்பதை நிரூபிக்கிறது சீதனத்தின் ஆதிக்கம். சீதனம் கொடுப்பதும் வாங்கப்படுவதும் பண்பாடு என இன்னமும் அங்கீகரித்தியாக மதிக்கப்படுகிறது.

சீதனம் இன்மையால் ‘இளமை இப்படியே சோகங்களோடே செத்துப்போகுமோ’ என்ற ஏக்கத்துடன் வெந்துகொள்ளும் ஏழைச் சகோதரிகள் எத்தனை ஆயிரம் பேர்....? சீதனத்தால் பாதிக்கப்படுவது பெண்கள் மட்டுமல்ல, பெண்களோடு கூடப்பிறந்த ஆண்களும் தான். பெண்ணடிமைத்தனம் தென்காசிய நாடுகளோடும் அரபு நாடுகளோடும் ஒப்பீட்டு ரீதியில் பார்க்கும்போது எமது

www.tamilarangam.net



நாட்டில் தாக்கமாக இல்லைத்தான். ஆயினும் அதன் முக்கிய கூறுகள் சமூகத்தில் ஆழமாகவே பதிந்துள்ளது.

இலங்கைப் பெண்களின் வாழ்க்கைத்தரம் தென்கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது உயர் நிலையிலேயே காணப்படுகிறது.

இலங்கை ஆங்கிலேய ஆட்சியிடமிருந்து சுதந்திரம் பெற்றபோது பெண்களுக்கென வழங்கப்பட்ட உரிமைகள்கூட ஆணாதிக்க, சமூக அமைப்பிற்கும் மதரீதியான கட்டுபாடுகளுக்கும் இசைவாகவே வழங்கப்பட்டன என்பதை நாம் கருத்திற்கொள்ளல் வேண்டும்.

1833ம் ஆண்டு பெண்கள்மீதான பலாத்காரம் தொடர்பாக ஆங்கிலேய அரசால் கொண்டுவரப்பட்ட சட்டமே இன்றுவரை இலங்கையில் நடைமுறையிலுள்ளது. பெண்களைப் பலாத்காரம் செய்தல்பற்றிய சட்டம் இங்கிலாந்து, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, இந்தியாவிலும்கூட பலமுறை மாற்றத்துக்குட்பட்டிருப்பினும் இன்னமும் இலங்கையில் 150 வருடங்களுக்கு முந்திய சட்டமே பேணப்பட்டு வருகிறது. பெண்களுக்கான வேலைவாய்ப்பு, சம்பள நிர்ணயம் போன்றவைகளிலும் ஆண்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. பெண்களுக்கான பிரசவ விடுமுறை சர்வதேச தொழில் மரபின் மூன்றாம் பிரிவின்படி 12 வாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றது. 'சோஷலிச' நாடுகளின் அரசுகள் 15 வாரங்கள் வழங்குகின்றன. இலங்கையில் 6 வாரங்கள் மட்டுமே பிரசவ விடுமுறையாக அரசால் வழங்கப்படுகின்றது. இலங்கை உட்பட உலகின் பல நாடுகளில் 25–40 வீதம்

www.tamilarangam.net



வரையிலான குடும்பங்கள் பெண்களின் உழைப்பிலும் தங்கியிருப்பதாக சர்வதேச ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இந்தப் பெண்களில் அதிகமானோர் குறைந்த கூலி பெறும் தொழில்களில் ஈடுபடுவதால் இவர்களின் வாழ்க்கைத்தரம் வறுமை எல்லைக்கோட்டிற்குக் கீழ்நிலையிலேயே காணப்படுகிறது. வேலைக்குப்போகும் பெண்கள் பின்பு வீட்டு வேலைகளையும் செய்யவேண்டிய ஆணாதிக்க சமூக அமைப்பின் தாக்கம்; பெண்களுக்கு இரட்டை வேலைப்பளு. இதனால் உடல் ஆரோக்கியமற்றவர்களாகவும் ஆகிவிடுகிறனர் - பெண்கள்.

பெண்கள் மேற்கத்திய நாடுகளில் சித்தரிக்கப்படுவதைப்போல அழகுப் பொருட்களோ, அல்லது போதைப் பொருட்களோ அல்ல. அதேவேளை மதங்களில் கூறப்படும் தெய்வீகத்தன்மை பொருந்தியவரும் அல்ல. மாறாக் பெண்களும் மனித ஜீவிகள்தான். பெண்களும் ஆண்களை விட உறுதியிலும் உணர்விலும் ஒன்றும் சளைத்தவர்கள் அல்ல. சமூக அமைப்பு முறைகள்தான் அவர்களை இரண்டாம்படி நிலைக்குத் தள்ளிவைத்திருக்கின்றது.

பொருளாதார உற்பத்தியில் ஈடுபடும் பெண்கள் பெண் அடிமைத்தனத்தின் முக்கிய கூறின் ஒருபகுதியினை உடைத்தெறிகின்றனர் - என்பது உண்மையே. இருப்பினும் பொருளாதார உற்பத்தியில் ஈடுபடுவதால் மட்டும் பெண்ணடிமைத்தனம் நீங்கிவிடும் என்று கருதுவது பிழையான போக்கேயாகும்.

ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமாக ஜனநாயக உரிமைகள் இருப்பதாகக் கூறிக்கொண்டாலும், நடைமுறையில் ஆணு

www.tamilarangam.net



திக்க மேலாண்மையும், பெண்களை வியாபாரப் பண்டமாக வும் போதைப் பொருளாக்கும் கலாச்சாரமுமே இருந்துவருகிறது.

தமிழீழம், சோஷலிச ஈழம் என்ற கோஷங்களினூடே பெண்விடுதலை, பெண்ணிலைவாதம் பற்றிய கருத்துக்களும் எமதுநாட்டில் பிரச்சாரப்படுத்தப்பட்டன. இங்கே பெண்விடுதலை என்றால் என்ன என்ற கேள்வி எழுவது நியாயமானதுதான்; பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையில் இருந்துவரும் சமூக,பொருளாதார, அரசியல் வேறுபாடுகளைத் தகர்த்தெறிந்து ஆணும் பெண்ணும் சமத்துவமாக வாழும் நிலையை சட்டத்திலும் சமூகத்திலும் உருவாக்குதலாகும். அப்படியெனில் பெண்ணிலைவாதம் என்ற கருத்தோட்டம் எதனைச் சுட்டி நிற்கிறது?

பெண்ணிலைவாதம் என்ற கருத்தோட்டத்தின் உட்கரு: சகல ஒடுக்குமுறை வடிவங்களிலிருந்தும் பெண் விடுதலைபெறுதல் என்பதோடுமட்டுமல்லாமல் பெண் என்ற நோக்கிலிருந்து பிரச்சனைகளை அணுகுதல், தீர்வுகளை, ஆய்வுகளை முன்வைத்தல் ஆகிய யாவற்றையும் ஒருங்கு குறிப்பதாகப் பரந்து ஆழமான அர்த்தங்களை உள்ளடக்குகின்றது. இப்படித்தான் பெண்ணிலைவாதம் என்பதற்கு யாழ்ப்பாண பெண்கள் ஆய்வு வட்டத்தினர் விளக்கம் தருகின்றனர்.

பெண்ணிலைவாதம் என்ற கருத்தோட்டம் 19ம் நூற்றாண்டிலும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் முதலாளித்துவ நாடுகளில் ஆண்களுக்குச் சமமான உரிமைகள் யாவும் பெண்களுக்கு வழங்கப்படவேண்டுமென்ற போராட்டத்திலேயே தோன்றியது. பெண்ணடிமைத்தனத்தின் மூல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


வேர்களை அறிந்து கொள்வதற்கு கார்ல் மார்க்ஸ், பகோபென் ஆகியோரின் ஆய்வே முக்கிய பங்களிப்பு வகிக்கிறது.

தனிச் சொத்துடைமையின் தோற்றமே பெண் அடிமைத்தனத்தின் மூலவேர் என்று குறிப்பிடுகின்றனர், மார்க்சிச ஆசான்களான மார்க்சும், ஏங்கெல்சும். ஆயினும் மார்க்சிசவாதிகள் முழுப்பெண் விடுதலை என்பது வர்க்கங்கள் அற்ற சமுதாயத்தில்தான் சாத்தியமாகும் என்று கருதினர். பெண்ணியவாதிகளுள்... மார்க்சிச பெண்ணிலைவாதிகள், தூய பெண்ணிலைவாதிகள், நவீன பெண்ணிலைவாதிகள் என வேறுபடுகிறனர். தூய பெண்ணிலை வாதிகளின் செயற்பாடுகள் (பரிசோதனைக் குழாயில் குழந்தை பெறுதல் போன்ற தீர்வுகளை முன்வைத்தல்) ஆண்களை முழுமையாக எதிர்நிலைக்குத் தள்ளிவைக்கின்றது.

மார்க்சிசம் சர்வதேச மக்களின் விடுதலையை நோக்காகக் கொண்டது. அந்த வகையில் மார்க்சிசம் கருதும் உயர்ந்த நோக்கங்களில் பெண்விடுதலையும் அடங்குகின்றது. அதேவேளை... இன்றைய மார்க்சிச பெண்ணிலைவாதிகளின் கருத்துப்படி பெண் விடுதலை என்பது மார்க்சிச சோஷலிசத்துடன் அமைப்புரீதியாக முழுமையாக இணைக்கப்படவில்லை. மார்க்சிசமானது ஆண் - பெண் என்ற பாலின வித்தியாசமின்றி வர்க்க சமுதாயத்தை ஆராய்கின்றது. ஒடுக்கப்படும் பாலினமாகிய பெண்களுக்கும் ஒடுக்கப்படும் வர்க்கங்களுக்கும் இடையிலுள்ள உறவுகளை ஆராய்வதில் மார்க்சிசம் இன்னும் வெகுதூரம் செல்லவேண்டும் என்ற விமர்சனத்துக்குட்படுத்துகின்றனர் மார்க்சிச பெண்ணிலைவாதிகள்.

www.tamilarangam.net



பெண்ணிலைவாதம் சம்பந்தமாக தத்துவார்த்த வரலாற்று நூல்கள் தமிழில் இல்லாத நிலையில் யாழ் பெண்கள் ஆய்வு வட்டத்தின் 'பெண்ணிலைவாதம் பொருத்தமானதே' என்ற வெளியீடு பெண்விடுதலையில் ஆர்வம் உள்ளவர்கள் மத்தியில் பெண்ணிலைவாதம் சம்பந்தமான விவாதங்களைத் தொடக்கிவைக்கிறது.

பெண்கள் எழுச்சி, பெண் விடுதலை என்று கோஷங்களை வைத்த தமிழ்-ஈழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த இயக்கங்கள் பெண்களைத் தமது இயக்கங்களில் இணைத்துக்கொண்டதும் வெளியீடுகளில் பெண்விடுதலை என்ற கட்டுரைகளைப் பிரசுரித்தார்களேதவிர பெண்விடுதலை சம்பந்தமாகப் பெண்களை அரசியல் ரீதியில் ஊக்குவிக்கும் செயற்பாடுகளை அரிதாகவே மேற்கொண்டன.

ஒருசில இயக்கங்கள் பெண்களைக் கொண்டு பிரசுரங்களை விநியோகிப்பது, ஆயுதப்பயிற்சி அளிப்பது, இவைகளை செயற்பாடுகளாகவும் தமிழீழம் கிடைத்தால் பெண்களுக்கும் விடுதலை கிடைத்துவிடும் எனவும் கருதினர். இவை எல்லாவற்றுக்கும் மேலாக பெண்விடுதலை என்று கொள்கை பரப்பிக்கொண்டே பெண்களை ஒடுக்கும் இந்த சமூக அமைப்புக்கு முண்டு கொடுக்கும் விதத்தில் சுவரொட்டிகளையும் பிரசுரங்களையும் வெளிக்கொண்டும் வந்தார்கள்.

'பெண்கள் ஆண்களுடன் சைக்கிளில் செல்லக்கூடாது, முழங்கால் தெரிய ஆடையணியக்கூடாது' இப்படிப் பல அர்த்தமற்ற கோஷங்களை முன்வைத்தனர். இவ்வெளியீடுகள் அன்னையர் முன்னணியின் கண்டனத்துக்கு உட்பட்டன.

www.tamilarangam.net


பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெண் போராளிகளுடன் உரையாடியபோது அரசியல்துறையில் ஈடுபட்டுள்ள ஒரு பெண்ணின் கருத்து "ஒரு பெண்ணின் பங்களிப்பானது வெறுமனே ஒரு ஆயுதம் தாங்கும் இயந்திரமாக இருப்பதைவிடப் பெரியது எனத் தயவுசெய்து ஞாபகத்தில் வைத்திருங்கள்" என்று குறிப்பிட்டார்.

பெண்விடுதலை, பெண்ணிலைவாதம் என்ற கருத்துக்கள் ஓங்கிவரும் இன்றைய காலகட்டத்தில்.. எமது தேசத்துப் பெண்களின் வாழ்நிலை சம்பந்தமான ஆய்வுகள் முதலில் இன்று பெண் விடுதலையில் ஆர்வம் கொண்ட அமைப்புக்களினால் மேற்கொள்ளப்படல்வேண்டும்.

மலையகப்பெண்கள், பின்தங்கிய தமிழ் பிரதேசத்துப் பெண்கள், புத்திஜீவிகள் மட்டத்திலுள்ள பெண்கள், என்ற சமூக நிலைமைகளுக்கேற்ப ஆய்வுகள் அமையவேண்டும். குறிப்பாகக் கல்வியறிவு வளர்ச்சி அடைந்த பிரதேசப் பெண்கள் மட்டத்தில் விடுதலை பற்றிய கருத்து பரந்துவருவதையும் அந்த சமூகத்தில் பெண்ணடிமைத்தனம் அழுத்தும் அளவு குறைவாகக் காணப்படுவதையும் நாம் கருத்தில் கொள்ளலாம்.

உண்மையில் 'பெண்விடுதலை என்பது பெண்ணிலைவாத அடிப்படைத் தத்துவத்தில் முன்வைக்கப்பட வேண்டும்' என்பதே பெண்விடுதலையில் ஆர்வம் கொண்டவர்களின் கருத்தாக பரந்து வருகிறது.

இந்த சமூகமானது பெண்கள்மீது பதிந்திருக்கும் ஒடுக்குமுறை வடிவங்களை சரியான, தெளிவான

(தொடர்ச்சி 62 ம் பக்கம்---)

www.tamilarangam.net

# ஒரு வாசகனின் கவிதை

சோதரி கல்யாணியின்
ஒற்றை நியாயங்கள்
படித்தேன்

அப்பா தொடக்கம்
சமுதாயம் வரை
அம்மா உட்பட
உங்கள் சம்மதம்
எதிர்பார்ப்பதில்லைத்தான்

பண்பாட்டைக் கட்டிக்
காப்பதில்தானே
கண்ணாக இருக்கிறீர்கள்
நீங்கள்
விட்டுக் கொடுப்பதால்
பெருமைப் படலாம் - ஆனால்
மாற்றியமைப்பதால்
மட்டும் தான்
திருப்திப்பட முடியும்
உங்களில்
எத்தனை பேர்
இதை புரிந்திருக்கிறீர்கள்?

வாங்குவதற்கு
சம்மதம் கூடக்
கேட்பதில்லை யென்றால்
சம்மதம் கேட்டு
வாங்கலாம் என்ற
கருத்தில்தான்
இருக்கிறீர்கள்
மன்னிக்கவும்
எங்களில் சிலர்
எப்போதும்
எங்களை விற்பதாக இல்லை

உங்களின்
தாவணிகள் ஈரமானது தெரியும்
எவ்வளவு காலம்தான்
பதியங்களாகவே
அடுப்படியில் இருப்பீர்கள்
புழுக்கம் கூடுகிறபோதாவது
வெளியே
வரமாட்டீர்களா என்றுதானே
பார்த்துக் கொண்டிருக்கிறோம்
பட்டியல் போட அல்ல
எண்ணங்களைப் பங்குபோட!

▲ மணி — மாறன் ▲

www.tamilarangam.net



## மலையகம் :

# மீண்டும் ஒரு நாடுகடத்தல்

இலங்கையின் பேரினவாத அரசுகள் மலையக மக்களுக்கு [illegible] காலத்துக்கு காலம், ஏதாவதொரு 'புனிதமான' நடவடிக்கைகளை மேற்கொண்டேயாக வேண்டும். அப்படிச் செய்யாவிடின் 'பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு பெரும் களங்கம் ஏற்பட்டு விடும்'. இதன் அடிப்படையிலேயே இந்தியக் கடவுச்சீட்டுப் பெற்ற ஒருலட்சம் மலையக மக்களை இலங்கையில் இருந்து அகற்றிவிடும் 'பெரும் பணியொன்றை' செய்ய தீர்மானித்துள்ளது.

இலங்கை இந்திய அரசுகள் மலையக மக்களின் அபிலாசைகளை கவனத்தில் கொள்ளாது அவர்களுக்குத் தெரிவிக்காமலும், தமக்கென்ன என்றதொரு போக்கில் இருந்து செய்த ஒப்பந்தங்களால் $1\frac{1}{2}$ நூற்றாண்டு காலம் சந்ததி சந்ததியாக வாழ்ந்த மலையகமக்களில் பெரும்பான்மையோர் அவர்களின் சுய விருப்பின்றி பலவந்தமாக விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

1948ல் 10 லட்சம் மலையக மக்கள் நாடற்றவர்கள் ஆக்கப்பட்டனர். அச்சமயம் நாடற்றவர்களின் ஒரு பகுதியினருக்கு பிரஜாவுரிமை வழங்க அன்றைய யூ.என்.பி அரசு தீர்மானித்தபோது $8\frac{1}{4}$ லட்சம் மலையக மக்கள் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்தனர். இவர்களில் 1 லட்சத்து 32 ஆயிரத்து 333 பேருக்கு மட்டுமே பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. அத்தோடு அதையடுத்த இரண்டு வருடங்களில்

www.tamilarangam.net



வாக்குரிமை அற்றவர்களாக்கப்பட்டனர். வாக்காளர்கள் பெயர்கள் பதிவேடுகளிலிருந்து கிரமேணமு பிரிவாக மிக நாசூக்காக அகற்றப்பட்டன அங்கிபரம்

| தேர்தல் தொகுதிகள் | வாக்காளர் தொகை | | தமிழ் வாக்காளர் |
|---|---|---|---|
| | 1947 பொதுத் தேர்தலில் | 1950 மீளாய்வின் பின்னர் | 1950இல் மீளாய்வின் பின்னர் |
| 1. நுவரெலியா | 24,295 | 9,279 | ——— |
| 2. தலவாக்கொல்லை | 19,299 | 2,914 | 244 |
| 3. கொத்மலை | 17,092 | 7,738 | 137 |
| 4. நாவலப்பிட்டி | 22,580 | 9,995 | 675 |
| 5. மஸ்கெலியா | 24,427 | 8,691 | 203 |
| 6. அப்புத்தளை | 11,123 | 7,049 | 322 |
| 7. பதுளை | 43,396 | 28,134 | 1291 |
| | 162, 212 | 73,800 | 2,872 |

* மேற் காட்டிய பட்டியலில் ஏழு தேர்தல் தொகுதிகள் மட்டுமே • காட்டப்பட்டுள்ளன. இவற்றில் 1947க்கும் 1950க்கும் இடையில் 73.800 வாக்காளர்கள் மாயமாகி விட்டது தெளிவாகிறது. சான்றுகள் காட்டியபின்னர் 2,872 தமிழர்களேவாக்காளர்களாக முடிந்தத.

1964ல் ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்ட பொழுது மலையக மக்களின் எண்ணிக்கை 9 1/4 லட்சமாகும். இதில் 5 1/4 லட்சம் பேரை இந்தியாவுக்கு அனுப்புவதென்றும் 3 லட்சம் பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்குவதெனவும், மிகுதி ஒரு லட்சம் பேர் சம்பந்தமாக பிறிதொருதினத்தில் முடிவெடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்ட 22 வருடங்களில் (1986 - வரை) சுமார் 2 லட்சம் பேருக்கு மட்டுமே இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. அதேசமயம் 4 1/4 லட்சம் பேருக்கு இந்தியப்பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. அதேசமயம் சுமார் 3 3/4 லட்சம் பேரும் அவர்களின் (சந்ததி அதிகரிப்பால் 1 1/4 லட்சம் பேர் உட்பட) மொத்தம் 5 லட்சம் மலையகமக்கள் இந்தியாவுக்கு அனுப்பட்டனர் இதேசமயம் 3 1/2 லட்சம் பேரும் அவர்களின் சந்ததி அதிகரிப்புகளுமாக மொத்தம் 5 லட்சத்திற்கு மேற்பட்டோர் நாடற்றவர்களாக

www.tamilarangam.net


வே இருந்தனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தின்
போது (கொண்டுவரப்பட்ட விசேட சட்டமூலம்) சகல நாடற்றவர்களும்
இலங்கைப் பிரஜைகள் ஆக்கப்பட்டுவிட்டனர் என அரசு
அறிவித்தது. இதற்குள் இந்தியக் கடவுச்சீட்டைப் பெற்ற
மக்களும் அடங்குவர். இவற்றைக் கணக்கில் கொள்ளாது இந்திய
க் கடவுச்சீட்டைப் பெற்றதென்ற ஒரு காரணத்திற்காக
(அரசியல் - பொருளாதார - வன்செயல் நிர்ப்பந்தமூலம்) ஒருலட்சம்
மக்கள் விரட்டப்பட்டுள்ளனர்.

இந்தியக்கடவுச்சீட்டைப் பெற்ற
மலையக மக்கள் கடந்த ஏழுவருடங்களுக்கு மேலாக இலங்கை
இந்தியக் கப்பல்சேவை நிறுத்தப்பட்டதன் (எமது நாட்டின் அமை
தியின்மையின்மூலம்) காரணமாக இந்தியா போகமுடியாமலும்
அத்துடன் இலங்கையிலும் நிம்மதியற்ற வாழ்வு இன்றி தவிக்கின்ற
-னர். இம்மக்கள் நாடுகடத்தப் போகிறார்கள் என்ற காரணத்தால், வேலை
யின்றியும், நிரந்தர வசிப்பிடமின்றியும் தம் வாழ்நாட்களை ஓட்டு
கின்றனர். தொழிற்சங்கங்களின் பணிநியமன வேண்டுகோள்
கிடையாது. சில தோட்ட நிர்வாகங்கள் வேலை கொடுக்க முன்வந்த
பொழுதும், ஏனைய தொழிற்சங்கங்களில் உள்ள சலுகைகள்
கொடுப்பனவுகள் எதுவுமின்றியே வேலை செய்கின்றனர்.

இந்தியக் கடவுச்சீட்டைப் பெற்ற
மலையக மக்கள் இலங்கையின் தேசிய அடையாள அட்டையின்
றியே. இவர்கள் நாளாந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற
னர். இவர்கள் இதை சட்டரீதியாகவும் பெறமுடியாது. அடையா
ள அட்டை இல்லாமை என்ற காரணம் மலையக இளைஞர்களை
சாதாரணமாக கைது செய்யவும் அவர்களை காலவரையறையின்றி)

www.tamilarangam.net



இராணுவ முகாம்களில் அடைத்து வைக்கவும் சமயமான வழியை
தேடிக் கொண்டிருக்கின்றது. இன்று அரசு வடக்கைப் போன்றே மலையக
த்திலும் தன் ராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது. இதனால்
மலையக மக்களை குறிப்பாக சாதாரண இளைஞர்களை மிக எளிதாக
பயங்கரவாதிகள் ஆக்கப்படுவார்கள். இது நாட்டின் எப்பாகத்திலும்
வாழும் இளைஞன் ஒருவன் இன்றைய இலங்கையின் இராணு
-வ கொலைக்கரத்தில் இருந்து தன்னை ஓரளவேனும் பாதுகாத்துக்
கொள்ள துணைபுரிவது அடையாள அட்டையே. இந்நிலையிலே
மலையகத்தின் இன்றைய மோசமான இராணுவ நடவடிக்கையி
-ன் மத்தியிலும் மலையக மக்கள் தங்கள்வாழ்வை ஓட்டுகின்றனர்.


பலவருடங்களுக்கு முன்பு பலவந்
ந்த ஆங்கிலேயரால் இந்தியக் கடவுச்சீட்டை பெற்றுள்ளவர்
கள் என்ற காரணத்திற்காகவும் அரசியல் பொருளாதார
சமூக ரீதியில், இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ்கின்ற
காரணத்தினாலும் கடவுச்சீட்டைப் பெற்ற மக்கள் தற்போது
இந்தியா போகவிரும்புகின்றார்கள் என்ற கணிப்பு அடிப்படையில்
தவறானது. தாங்கள் இந்தியா போனாலும் தங்களுக்கு வள
மான வாழ்வு கிட்டாதென்பதையும் உணர்ந்துள்ளனர்.
ஏற்கனவே தமிழகம் சென்ற மலையக மக்கள் தமிழ்நாட்டில்
படும் அவஸ்தைகளை இவர்கள் அறியாமலுமில்லை. சந்ததி சந்ததி
யாக பிரிக்கமுடியாத சமூக-பந்தபாச உறவுகளால் பின்னிப்
பிணைக்கப்பட்டுள்ள இம்மக்கள் இலங்கையிலேயே தம்வாழ்
-வைத் தொடரவே விரும்புகின்றனர். மலையக மக்களைப் பொ
-றுத்தவரை இந்தியா அவர்களுக்கு அந்நிய தேசமே.

எனவே இந்நாட்டில் வாழவிரும்பும்
இம்மக்களை காலாவதியாகிப்போன சட்டங்கள் போன்றவை

(தொடர்ச்சி 49 ம் பக்கம்...)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# துரத்தும் பாசிசமும் துளைக்கும் துப்பாக்கி குண்டும்



## Bullets for Reporters

*In Sri Lanka, the penalty for journalists can be exile—or death*

அப்பொழுது அந்தத் தீவின் தென்பகுதியில் கொலைகள் தொடர்ந்த வண்ணம் இருந்தன. இரு வருடங்களுக்கு முன்பு ---- இலங்கைப் பத்திரிகையாளர் சிலர் துணிந்து எழுதினர். JVP தான் இக் கொலைகளுக்குப் பொறுப்பு என அம்பலமாக்கினர். அவர்களில் முக்கியமான பத்திரிகையாளர் ராஜா (உண்மைப் பெயரல்ல) என்ற இளைஞர். இவருக்கும் மரணதண்டனைக்கான அச்சுறுத்தல் செய்தியொன்று JVP யிடமிருந்து வந்தது. அவர் நாட்டை விட்டு விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இன்று வெளிநாட்டில் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்.

1988 ம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து ஒரு வருட காலத்தில் மட்டும் 6 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர். பிரேமதாசா அரசால் அமைக்கப்பட்ட கொடூரமான 'பயங்கரவாத எதிர்ப்பு இயக்கத்தின்' வேட்டையாடலைக் கண்டு 1989 இன் இறுதியில் தங்களின் முதுகெலும்பை முறித்து விடுவார்களோ என பெரிதும் கவலையுற்றிருந்தனர் JVP யினர்.

ஆனாலும் தமிழர் வாழும் வடபகுதியில் மூர்க்கத்தன மான சுபாவமுள்ள ஆயுதமேந்திய குழுவினரை விடவோ, JVP யினரை விடவோ, பிரேமதாசா அரசு ஒரு துளியளாவேனும் பத்திரிகைச் சுதந்திரத்தை வழங்க மாட்டாது என்பதை ராஜாவும் மற்றைய பத்திரிகையாளர்களும் கூடிய கெதியில் அறிந்துகொண்டனர்.

> இக் கட்டுரை வெளிவந்த TIME (April 23, 1990) சஞ்சிகை இலங்கை அரசால் தடைசெய்யப்பட்டது. பிரேமதாசாவின் இன்னொரு முகத்தை தோலுரித்துக்காட்டும் - பலர் காணத்தவறிய - இன்னொரு பக்கமாக இக் கட்டுரை இருப்பதால், இங்கு தமிழாக்கம் செய்து வெளியிடுகிறோம்.

அரசின் மனித உரிமை மீறல்களை அம்பலப்படுத்தி வந்தவரும், INTER-PRESS AGENCY யைச் சேர்ந்தவருமான பத்திரிகையாளர் றிச்சார்ட் டி சொய்சா (31 வயது) இரு மாதங்களுக்கு முன்பு பொலிசு சீருடையணிந்த ஆயுத மேந்திய அறுவரால் கடத்திச் செல்லப்பட்டார். மறுநாள் இரண்டு குண்டுகள் தலையில் பாய்ந்துள்ள நிலையில் கடற்கரையில் பிணமாகக் கிடந்தார்.

« அரசாங்கம் எந்தவிதமான விமர்சனத்தையும் ஜீரணிக்க மறுக்கிறது. நான் திரும்பிப் போகவும் மாட்டேன், எழுதவும் மாட்டேன் »

என்கிறார் ராஜா.

www.tamilarangam.net



கடந்த ஏழு வருடங்களில் JVP யினருடனும் தமிழ்ப் பிரிவினைவாதிகளுடனும் அரசு நடத்திய யுத்தத்தில் கொலையுண்ட அல்லது ஆபத்தான முறையில் காயப்பட்டவர்களின் பட்டியலில் இலங்கைப் பத்திரிகையாளர்களும் அடங்குகின்றனர். கடந்த இரண்டரை வருடங்களில் 12 பத்திரிகையாளர்கள் கொலைசெய்யப் பட்டுள்ளனர். இன்னும் 10 பேர் நாட்டை விட்டே ஓடியுள்ளனர். இன்னும் இங்கே தங்கியுள்ள பத்திரிகையாளர்களோ பிரேமதாசாவையோ அல்லது அவரின் நெருங்கிய சகாக்களையோ சீண்டாத வகையில் செய்திகளை தாங்களாகவே தணிக்கை செய்து எழுதிவருகின்றனர்.

« முன்பெல்லாம் ஒரு பத்திரிகையாளர் கூடிய பட்சம் (அவர் கடமையாற்றும் நிறுவனத்தின் பகைமையைச் சம்பாதித்தால்) தனது வேலையை இழக்க நேரிடும்; ஆனால் இன்றோ.... உயிரையே இழக்க நேரிடும் » என ஒரு பிரதான பத்திரிகையின் ஆசிரியர் கூறுகிறார்.

இன்று செய்தி நிறுவனங்களின் மீதான ஆட்சியாளரின் சகிப்புத்தன்மை அற்ற நிலை ஒரு பெருண்மையைக் கொண்டதாக உள்ளது. அவ் உண்மை என்னவெனில்; 1989 இல் JVP க்கு எதிராக அரசின் கொலைகார ராணுவப் பிரயோகமும் அதனடிப்படையில் நிகழ்ந்த ஆயிரக்கணக்கான கொலைகளும் அவர்களை அரசியல் யாப்பை புறக்கணித்தும், நீதி நியாயங்களை விட்டெறிந்தும் செயற்படும் ஒருவிதமான வெறித்தனத்திற்கு தூண்டியுள்ளது என்பதாகும்.

www.tamilarangam.net



ஆளும் கட்சி உறுப்பினர்களின் கையாட்களாக செயற்படுவதாக நம்பப்படும் ஆட்கொல்லி ராணுவ பிரிவு அண்மைக் காலங்களில் போட்டி அரசியல் கட்சி உறுப்பினர்கள் சிலரை சுட்டுக்கொன்றுள்ளது. இதே போல் மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரணைகளை மேற்கொண்டிருந்த நான்கு சட்டத்தரணிகள் அரச கொலையாளிகளால் கொலை செய்யப்பட்டனர். பல சட்டத்தரணிகள் நாட்டைவிட்டு ஓடிவிட்டனர்.

« எல்லாத் தடைகளும் பிரச்சினைகளின் நன்மை தீமைகளை சீர்தூக்கிப் பார்க்கும் ஜனநாயக மரபை நாசமாக்கியுள்ளன. » என்று கூறுகிறார் கொழும்பிலுள்ள அரசியல் ஆய்வாளரான ராதிகா குமாரசாமி.

1970 க்கு முன்பு வரைக்கும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனங்கள் ஆசியாவிலேயே மிகச் சிறந்த ஸ்தாபனங்களாக விளங்கின. 1985 — 87 இடையில் உள்நாட்டுப் பத்திரிகைகளை LTTE கட்டுப்பாட்டுக்குள் எடுத்த நிகழ்வும் இரு பத்திரிகையாளர்களை கொன்ற சம்பவமும் பத்திரிகை ஸ்தாபனங்களை (முதன்முதலாக) பயமுறுத்தலுக்கு உள்ளாக்கின. 1987 — 90 இடையில் இந்திய ராணுவமும் அதன் கைக்கூலிகளான EPRLF உம் முன்னையவர்களை விட எந்தவிதத்திலும் சளைக்காத விதத்தில் பத்திரிகைகளைக் கட்டுப்படுத்தின. LTTE ஆதரவாளரான சின்னத்துரை திருச்செல்வம் எனும் பத்திரிகையாளருக்கு கொலைப் பயமுறுத்தல் விட்டனர். அவரும் நாட்டை விட்டுத் தப்பி ஓடி

www.tamilarangam.net



கடையில் புகலிடம் பெற வேண்டி ஏற்பட்டது. அவரின் மகனை சுட்டுக் கொன்றதுடன் அவரின் வீட்டையும் சேதப்படுத்தினர் EP யினர்.

« இதுதான் எமது நாட்டில் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு கிடைக்கும் பரிசு »

என்கிறார் திருச்செல்வம்.

JVP யும் LTTE யும் தங்களுக்கு அநுசரணையாக பத்திரிகைகளை தங்களின் பிரசிசாரத்திற்குப் பயன்படுத்த முனைவதைப் போலவே, பிரேமதாசா அரசும் அதன் சொந்த காரணங்களுக்காக செய்தி ஸ்தாபனங்களுக்கு வாய்ப்பூட்டுப் போட்டு மனித உரிமை மீறல்களை மூடி மறைக்க முயல்வதாக தோன்றுகிறது. 1990 ம் ஆண்டில் இலங்கைக்கு வெளிநாட்டு உதவியாக 800 கோடி அமெ.டொலர்கள் கிடைக்க இருக்கிறது. இவ்வாறான உதவியிலேயே தற்போது இலங்கையின் பொருளாதாரம் தங்கி இருக்கிறது. பிரேமதாசா அரசின் மனித உரிமை மீறல் செயற்பாடுகள் இவ் உதவி வழங்கும் நாடுகளை குழப்பமடையச் செய்திருப்பதும் பத்திரிகைகளுக்கான வாய்ப்பூட்டுக்கு இன்னொரு காரணமாகும். உதாரணமாக வருடமொன்றிற்கு 20 கோடி டொலர்களை நன்கொடையாக வழங்க இருக்கும் நெதர்லாந்து நாட்டை மனித உரிமை குழுவினர் அவ் உதவியைத் தவிர்க்கும்படி கேட்டு நிர்ப்பந்திப்பதாகத் தெரிகிறது.

மனித உரிமைக்காக வாதாடும் சட்டத்தரணியான திரு. பிரின்ஸ் குணசேகரா அவரது உதவி

www.tamilarangam.net



யாளராக இருந்த மற்றைய சட்டத்தரணி (மருமகன்) சுட்டுக்கொல்லப் பட்டதால், தான் லண்டன் செல்லத் தீர்மானித்துள்ளார்.

« மனித உரிமைக்காக யாரேனும் ஒரு சிறு துரும்பை அசைத்தால்கூட அரசு அவர்களை வேட்டையாட தயங்குவதில்லை » என்கிறார் இவர்.



டி.சொய்சா அரசு ஆட்கொல்லிப் படைகளின் அடாவடித் தனங்களையும் செயற்பாடுகளையும் பல ஆவணங்களைக் கொண்டு அம்பலப்படுத்தினார். கதைகளாகவும் சித்தரித்து எழுதினார். இதுமட்டுமின்றி வெளிநாட்டிலிருந்து வந்த மனித உரிமை பாதுகாப்பு இயக்கத்தினருடன் அரசு நடந்துகொண்ட முறைகளையும், அவர்கள் பற்றி பேசிய பேச்சுக்களையும் ஒழுங்காக சேகரித்தார். இதன் மூலம் அரசிற்கு ஒரு அச்சுறுத்தலாக இருந்திருக்கிறார். டி.சொய்சா லிஸ்பேன் (LISBON) இல் புதிய பதவியொன்றை ஏற்க இருந்ததாகவும், இதன் மூலம் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை மேற்குலகின் கவனத்திற்கு கொண்டுவருவதில் மிகத் தீவிரமாக செயற்பட எண்ணியிருந்ததாகவும் இதுவே அவர் கொல்லப்பட்டதற்கான முக்கிய காரணம் எனவும்

www.tamilarangam.net



அவரின் நண்பர் ஒருவர் கூறுகிறார்.

மேலும் அரசு குறிவைத்திருந்த இன்னொரு ஆபத்தான இலக்கினுள்ளும் தன்னைப் புகுத்திக்கொண்டார் டி.சொய்சா. அதாவது பிரேமதாசாவை தனிப் பட்ட முறையில் சினமூட்ட வைக்கக்கூடிய திரைப்பட மொன்றை தயாரிப்பதிலும் ஈடுபட்டிருந்தார். இதுமட்டு மின்றி "யார்- இவர் என்ன செய்துகொண்டிருக்கிறார்" என்ற நாடகமொன்றையும் எழுதினார். இது பிரேமதாசாவின் ஆட்சிமுறையை சிந்திக்கும் நாடகமாகும். பெப்ரவரி மாதம் இந் நாடகம் அரங்கேற்றப்பட இருந்த முதல்நாளே அந் நாடகத்தின் தயாரிப்பாளர் (டி.சொய்சாவின் நண்பர்) கடத்தப்பட்டார். அவர் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இச் சம்பவம் நடந்து 3 கிழமையின் பின் டி.சொய்சா கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

பிரேமதாசாவைக் கண்டித்த மற்ற பத்திரிகையாளர்களும் குறைந்தளவு தண்டனையாவது பெற்றுள்ளனர். மேலும் பிரேமதாசாவின் 'சாதி' அடிப்படை பற்றி எழுதிய லண்டனிலுள்ள GUARDIAN பத்திரிகையாளர், ரொறன்ரோவிலுள்ள GLOBE & MAIL பத்திரிகையாளர் ஆகியோருக்கும் விசா மறுக்கப்பட்டுள்ளது.

« அரசு விமர்சனங்களை பொறுமையுடன் எதிர்கொள்ளும் தன்மை மிகமிக தாழ்ந்த நிலையிலேயே உள்ளது » என கொழும்பிலுள்ள அரசியல் அவதானி ஒருவர் விமர்சித்துள்ளார்.

நன்றி ; TIME, 23.4.90

By EDWARD W. DESMOND NEW DELHI

—With reporting by Anita Pratap/ Colombo

www.tamilarangam.net



சுவிஸ்:

# சிறுவர் பாடசாலையில் தமிழ் பிஞ்சுகளின் வேதனை

மூர்த்தி மாஸ்ரர்.

இக்கட்டுரையின் முதல் பகுதியை வாசிக்கத் தவறியவர்கள் தயவு செய்து முதலில் அதை வாசிக்குமாறும் தொடர்ந்து இவ்விரண்டாம் பகுதியை வாசிக்குமாறும் அன்புடன் கேட்கப்படுகிறீர்கள்.

Social-Paedagogischer Diesnst der Schulen எனும் சிறுவர் உளவியல் நிலையத்தில் எமது மழலைகளுக்கு எவ்வாறு பயிற்சி அல்லது உதவி வழங்கப்படுகிறது என்பதைச் சற்று விரிவாகப் பார்த்தோமானால், எமக்கு அழுவதா அல்லது சிரிப்பதா எனப் புரியாத ஒரு நிலையே ஏற்படும். ஆசிய அறிவோ அல்லது தமிழ் கலாச்சார அறிவோ அற்ற ஒருவரால் எமது குழந்தைக்குத் தனியாகவோ அல்லது வேறுசில குழந்தைகளுடன் சேர்த்தோ பயிற்சி அளிக்கப் படுகிறது. பயிற்சியின் முதல் கட்டமாக ஐரோப்பிய வீடொன்றில் உள்ள நாளாந்தப் பழக்க வழக்கங்களை பயிற்றுவிக்க முயல்கிறார்கள்.

அதாவது எமது குழந்தைகட்கு எவ்வாறு மேசையில் இருந்து சாப்பிடவேண்டும், மேசை விரிப்புக்களை எவ்வாறு பேணவேண்டும், கரண்டி, கத்திகளை எப்படிப் பாவிக்க வேண்டும் எனச் சொல்லிக் கொடுக்க முனைகிறார்கள். இவை தமிழர் வீடுகளில் கடைப்பிடிக்கப் படுவதில்லை என்பதால் எமது பிள்ளைகளுக்கு அவற்றில் அக்கறை ஏற்படுவதுமில்லை. ஆனால் இது பயிற்றுவிப்பாளரைப் பொறுத்தவரையில் பிள்ளையில் உள்ள ஒரு பெரிய குறைபாடாகும்.

எமது வீடுகளில் குழந்தைகள் கத்தரிக்கோல், கத்தி போன்றவற்றை எடுத்து விளையாட நாம் அனுமதிப்பதேயில்லை. ஆனால் சிறுவர் நிலையங்களில் இவற்றைச் சாதாரண கருவிகளாகக் கருதி வெட்டி விளையாட அனுமதிக்கிறார்கள். ஏனைய குழந்தைகள் கத்தரிக்கோலை லாவகமாகப் பயன் படுத்தும் அதேசமயம் எமது பிள்ளைகள் தாறுமாறாக வெட்டித் தள்ளுகிறார்கள். இதுவும் ஒரு குறைபாடாகக் கொள்ளப்படுகிறது.

பொருட்களை இனம் காணுதல் எனும் தலைப்பில் பலவகையான பொருட்களைக் கொடுத்து எவையெவை எங்கெங்கு இருக்க வேண்டும் என்ற பயிற்சியுமுண்டு. பலவிடயங்களைக்

www.tamilarangam.net



காட்டிக்கொடுக்கிறார்கள் பின்னர் செய்து காட்டுமாறு கேட்கிறார்கள். ஒரு வீட்டின் படத்தைக் கொடுத்துவிட்டு சில பொருட்களையும் கொடுத்து வீட்டிற்கு உள்ளே இருக்கவேண்டிய பொருட்களை வீட்டின் உள்ளேயும் வெளியே அல்லது தோட்டத்தில் இருக்கவேண்டிய பொருட்களை வீட்டுக்கு வெளியேயும் வைக்குமாறு கேட்கப்படுகிறது. எல்லாக் குழந்தைகளும் சரியாகச் செய்துவிட்டார்கள் ஆனால் பாலம் இளம் காலுலதில் அறிவு குறைந்த தமிழ்க்குழந்தை மாத்திரம் தவறுவிட்டுவிட்டது. எனவே அக்குழந்தைக்கு விசேட உதவி தேவையெனத் தீர்மானிக்கப் படுகிறது. அது சரி அந்தக் குழந்தை விட்ட தவறு என்ன எனக் கேட்கத்தூண்டுகிறதா ?

வீட்டிற்கு வெளியே நாயைத் தூக்கி வைத்ததுதான் தமிழ்க் குழந்தை செய்த தவறாகும். !!!!

அக்குழந்தை இங்கு பிறந்திருந்தாலும் கூட எமது வீட்டுச் சூழலில் நாய்க்கு வீட்டிற்குள் அனுமதியில்லை என்பதைத் தெரிந்து கொண்டதுதான் அது செய்த பாவம்.

தமிழ்ப் பெண்கள் சேலைகட்டும் போது அவர்களுக்கு ஏற்படும் பூரிப்பும் பெருமையும் அளவற்றது. ஆனால் அதற்காக அவர்களுக்குக் கிடைக்கும் சந்தர்ப்பமோ மாதம் ஓரிரு தடவைகள்தான். தமது ஆசையை தங்கள் குழந்தைகளுக்கு எமது கலாச்சார உடைகளை அதுவும் ஏனைய நாடுகளில் இருந்து வரவழைத்த உடைகளை அணிவித்துப் பாடசாலைக்கு அனுப்பி வைப்பதன் மூலம் பூர்த்தி செய்துகொள்ள முயற்சிக்கிறார்கள். இதுவும் ஒரு பெரிய சிக்கலை ஏற்படுத்தி விடுகிறது. எம்மில் சிலர் பிள்ளைகளிடமே சொல்லிவிடுகிறோம் " சட்டை கவனம் " என்று. இதனைப் பாடசாலையில் குழந்தை கூறுகிறதோ இல்லையோ ஆசிரியர்கள் கவனமாக இருக்க வேண்டிய நிலைக்குத் தாமாகவே தள்ளப்படுகிறார்கள். ஏற்கனவே இருக்கும் பிரச்சனைகளுக்குள் இதுவும் ஒரு புதுப்பிரச்சனை அவர்களுக்கு. ஏனைய பிள்ளைகள் தோட்டத்தில் விளையாடும் போது தமிழ்ப் பிள்ளை மாத்திரம் தடுக்கப்பட வேண்டிய நிலையேற்படுகிறது. இது பிள்ளையின் மனத்தில் ஓர் ஏக்கத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்தி விடுகிறது. முடிவு .......................

நாங்கள் எமது குடும்பப் பிரச்சனைகளை பிள்ளைகளின் முன்னிலையிலேயே தீர்த்துக் கொள்கிறோம். இதனை அவதானித்துக் கொண்டிருக்கும் குழந்தையின் பிஞ்சு உள்ளத்தில் ஆழமான தாக்கத்தினை அது ஏற்படுத்துவதை நாம் அறிவதில்லை அல்லது அறிய விரும்புவதில்லை அல்லது

www.tamilarangam.net



அதுபற்றி எமக்கு அக்கறை இல்லை. " விடியப் போய் முறி முறியெண்டு முறிஞ்சிட்டு வாறம் நாங்கள் எதப் பாக்கிறது ? " . உண்மை தான் அப்பாவும் அம்மாவும் நாள் முழுக்க முறியினம் ஆனால் ஆருக்காக முறியினமோ அவையைப் பற்றி அவைக்கு அக்கறையில்லை. !!!

வீட்டில் நடந்த சம்பவங்களுடன் விடிந்ததும் பாடசாலைக்குப் போகும் பிள்ளை ஏதோ ஒருவித கவலையை உணர்கிறது ஆனால் அதைச் சரிவர வெளிக்காட்டத் தெரியாமல் தனக்குத் தெரிந்த வருத்தங்களை எல்லாம் ஆசிரியரிடம் கூறி அன்று வைத்தியரிடம் போகவைக்கிறது.

மறுபுறத்தில் நாம் வேலையால் வீடு வந்த களைப்பையும் எமது வீட்டுக் கவலையையும் போக்குமுகமாக வீடியோவைப் போடுகிறோம். படம் முடிய 10 அல்லது 11 மணி ஆகிவிடும். எமது பிள்ளையும் எங்களுடன் சேர்ந்து 10, 11 மணிவரை படம் பார்ப்பதை நாம் தடுப்பதேயில்லை. " அதுகள் நித்திரை வந்தாப் போய்ப் படுக்குங்கள்தானே " என விட்டுவிடுவோம். மறு நாள் காலையில் நாம் வேலைக்குப் போகமுன்னர் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பியாக வேண்டும் என்பதால் விரைவாக எழுப்பி " அன்பாக " அனுப்பி வைக்கிறோம். சோர்வாகப் பாடசாலைக்குப் போகும் பிள்ளை சுறுசுறுப்பின்றியும் தூங்கி விழுந்தபடியும் இருக்கும். அங்கு படுக்க அனுமதிக்கப் படும் அதேசமயம் குறிப்புப் புத்தகத்தில் பதிந்தும் வைக்கப்படும்.

கிழமையில் பெரும்பாலான நாட்கள் சோர்வாகவோ அல்லது (கவலையில்) வருத்தமாகவோ பிள்ளை வருவதால் பிள்ளைக்கு நிச்சயமாக உடல் சம்பந்தமான அல்லது உளசம்பந்தமான வருத்தம் இருக்கவேண்டும் என அவர்கள் தீர்மானிப்பதில் யாரும் தவறு காணமுடியாது .

எம்மைப் பொறுத்தமட்டில் பாடசாலைக்கு எமது பிள்ளையை அனுப்பி வைத்தால் சரி. பிள்ளைக்கு படிப்புச் சம்பந்தமான சகலமும் கிடைத்துவிடும். வீட்டில் உணவும் உடையும் கொடுக்கிறோம் பாடசாலைக்குக் காசு கட்டுகிறோம் இதைவிட வேறு என்ன வேண்டும் ?. நாம் காசு கட்டுவதால் பாடசாலையில் உள்ளவர்கள் எம்மிடம் சம்பளம் வாங்குபவர்களாகி விடுகிறார்கள் அதாவது அவர்கள் எங்கள் வேலைக்காரர்கள் எங்கள் பிள்ளைகளைப் பராமரிப்பதே அவர்களின் வேலை. எனவே அவர்களை விடச்சற்று உயர்ந்த அந்தஸ்த்து எமக்குக் கிடத்தும் விடுகிறது. இதனால் தானோ அல்லது உண்மையிலேயே மொழிப் பிரச்சனை காரணத்தாலோ எமக்குக் கிடைக்கும் பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடல் அழைப்பிதழுக்கு மதிப்பே கொடுப்பதில்லை. எல்லாப் பெற்றோரும் கலந்து கொள்ளும் அந்நிகழ்ச்சியில் நாங்கள் மட்டும் கலந்து கொள்வதில்லை. வேலைத்தள லீவின்மை ஒரு காரணமாகக் காட்டப்படுகிறது.

www.tamilarangam.net



பிள்ளையின் விபரங்களைக் கூறுவதற்குப் பெற்றோரைச் சந்திக்கமுடியாத நிலையில் ஏனை உதவி நிலையங்களை நாடவேண்டிய நிலமைக்கு பராமரிப்பாளர்கள் அல்லது ஆசிரியர்கள் தள்ள படுகிறார்கள். இந்த வேதனைகள் எல்லாம் சுவிஸில் உள்ள தமிழ்ப் பிஞ்சுகளுக்கு மாத்திரம்தான ? ஏனைய நாடுகளில் எப்படி?

எனது பிள்ளைக்குத் தமிழ் தெரியாது எனக் கூறுவதில் பெருமைப் படும் பெற்றோர்கள லண்டனில் இருந்ததாகக் கேள்விப் பட்டோம். இந்த நிலமைக்கு இன்னமும் சுவிஸ் வரவில்லை

♥ ♥ ♥

சுவிஸ் :

**இனவெறித் தாக்குதல்** ⁑ பிந்திய செய்தி ⁑

கன்ரோன் ZURICH இல் Regensdorf எனும் இடத்தில் 20.7.90 அன்று 25 வயதுடைய தமிழ் நண்பர் (அகதி) ஒருவர் நாஜிகளின் தாக்குதலுக்குப் பலியானார். இரு தமிழ் நண்பர்கள் ரெலிபோன் "பூத்" (BOOTH) ஒன்றில் தொலைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தபோது நிறவெறி பிடித்த நாஜிகளால் கோரமாகத் தாக்கப்பட்டு, அவர்களில் ஒருவர் பின் மரணமானார்.

நாஜிகளின் இனவெறிக்கு மீண்டுமே ஒருவர் பலி!

www.tamilarangam.net



# புராதன வாழ்விலிருந்து 4

சென்ற இதழில் அடிமைகள் சமுதாயம் பற்றி காந்தனின் கேள்விகளுக்கு மகேசனின் விளக்கங்களைப் பார்த்தோம். இவ் இதழில் ஆசியாவில் அடிமைகள் சமுதாய அமைப்பு நிலவியதா என்றும் புராதன பொதுஉடமை சமுதாயத்தில் இருந்து எப்படி இன்றைய நிலைக்கு ஆசிய மக்கள் முன்னேறினார்கள் என்பது பற்றி காந்தன் கேட்ட கேள்விகளுக்கு மகேசனின் விளக்கங்களைப் பார்ப்போம்.

▲ எஸ். மோரசாமி

மகேசன்; ஆசியாவைப் பொறுத்தவரை இங்கு ரோம், கிரேக்கம் போன்ற இடங்களில் நிலவியது போல் அடிமைகள் என்ற அமைப்பு வடிவம் காணப்படவில்லை. — புராதன பொதுவுடமை சமூகம் அழிந்த போது முதன்முதலில் தனியுடமை வடிவில் அடிமைகள் முறையும் அதன்பின் நிலப்பிரபுத்துவம் என்ற வடிவிலும் சில இடங்களில் பண்டைய பொதுவுடமையில் இருந்து நேரடியாக நிலப்பிரபுத்துவமும் வந்தது. ஆனால் இந்தியா போன்ற ஆசிய நாடுகளில் பண்டைய பொதுடமை அமைப்பின் சிதைவில் உருவான சமுதாய அமைப்பை ஆசிய உற்பத்திமுறை என்று மார்க்ஸ் அழைத்தார். இங்கு விவசாயத்திற்கும் கைத்தொழிலிற்கும் இடையில் பெரியளவில் வேலைப்பிரிவினை இடம்

www.tamilarangam.net



பெறவில்லை. சந்தையில் விற்பனை நோக்கமாகக் கொ-
-ண்ட பொருளுற்பத்தி முறை பெரிதாக இருக்கவில்லை.
பணத்தின் உபயோகம் மிககுறைந்த அளவிலேயே
நடைபெற்றது. தத்தம் தேவைகளை தாமே நிறைவுசெ-
-ய்து கொள்ளும் வகையிலான கிராம சமுதாயங்கள் ஆசிய
உற்பத்தி என்னும் உற்பத்திமுறை நிலவியது.

காந்தன்; நீ கூறும் இவ்விடயங்களை விபரமா-
-க கூறுவாயா?

மகேசன்; ஆம், "மூலதனம்" என்னும் நூலில் காரல் மா-
-ர்க்ஸ் என்ற அறிஞர் இதுபற்றி குறிப்பிட்டதை உன-
-க்காக வாசித்துக் காட்டுகிறேன்.

"இந்திய சமூகங்கள் மிகமிக புராதனமான
சின்னஞ்சிறிய சமூகங்களாகும். இவற்றில் சில இந்நாள்
வரையிலும் நீடித்துவந்திருக்கின்றன. நிலம் சமூகத்தின்
பொதுச் சொத்தாய் இருப்பதையும், விவசாயமும் கைத்
-தொழிலும் ஒன்றோடொன்று சேர்ந்து இருப்பதையும் மாற்ற
முடியாத வகையில் உழைப்பு பகிர்வு ஏற்பட்டிருப்பதையும்
இச்சமூகங்கள் அடிப்படையாக கொண்டுள்ளன. நூறு ஏக்-
-கர் முதல் பல்லாயிரம் ஏக்கர் வரையில் இச்சமூகங்கள்
வாழுகின்றன. அவை ஒவ்வொன்றும் தத்தமது சுயதேவை-
-களை தாமே நிறைவேற்றிக் கொள்கின்றன. உற்பத்தியா-
-கும் பொருட்களின் பெரும்பகுதி சமூகத்தின் நேரடியான
உபயோகத்திற்கே பயன்படுகின்றன. அவைவிற்பனை
பண்டங்களாவதில்லை. ஆகவே இத்தகைய கிராமங்-
-களில் நடைபெறும் உற்பத்தி விற்பனைச் சரக்குகளின்
பரிவர்த்தனை அடிப்படையில் இந்திய சமூகம் முழுவதிலும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏற்பட்டிருக்கும் உழைப்பு பகிர்வை சார்ந்திருக்கவில்லை. கிராம சமூகங்களின் உற்பத்தி தேவைகளைப் பூர்த்திசெய்தபிறகு மிச்சமிருக்கும் உபரிப் பொருட்கள்தான் அவற்றிலும் ஒரு பகுதி வரியாக அரசனுக்கு எட்டிய பிறகே சந்தைக்கு வருகிறது.

இந்தச் சமூகங்களின் உள்ளமைப்பு இந்தியாவின் வெவ்வேறு பாகங்களில் வெவ்வேறு அளவுகளில் உள்ளது. சிக்கலே இல்லாததும் எளிமையானதும் ஆன இச் சமூகங்களில் நிலச்சாகுபடி பொதுவில் நடைபெறும். உற்பத்தியாகும் தானியங்களை சமூக உறுப்பினர்கள் பங்குபோட்டுக் கொள்கிறார்கள். அதே சமயம் ஒவ்வொரு குடும்பமும் நூல் நூற்றலையும், துணி நெய்தலையும் துணைத் தொழிலாக கொண்டுள்ளன. ஒவ்வொரு கிராமங்களிலும் பஞ்சாயத்து நிலவுகிறது. நாட்டாண்மைகாரர், கணக்கர், காவற்காரர், பிராமணர், சோதிடர், வைத்தியர், ஆசிரியர், இயவர், சலவைத் தொழில் செய்வோர் .... போன்றோர் காணப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் தத்தமக்கு ஒப்படைக்கப்பட்ட வேலைகளை கவனிக்கின்றனர். இவர்கள் சமூகத்தின் கூட்டு செலவில் பராமரிக்கப்படுகின்றனர். சனத்தொகை அதிகரித்தால் இதே வழியில் இதே வழியில் யாரும் குடியேறியாத இடத்தில் ஒரு புதிய சமூகம் உருவப் பெறுகிறது.

தன் தேவைகளை தானே பூர்த்தி செய்து கொள்ளும் இந்த சமூகங்கள் இதே வழியில் இடைவிடாமல் பெருகிக் கொண்டிருக்கின்றன. தற்செயலாக அழிக்

www.tamilarangam.net



கப்பட்டாலும் அதே இடத்தில் அதே பெயருடன் மீண்டும் நிலை தோன்றுகின்றன. இந்த உற்பத்தி ஸ்தாபனத்தின் சிக்கலற்ற எளிய தன்மையில் தான் ஆசிய சமூகங்களின் நிரந்தரத் தன்மையின் இரகசியமுள்ளது"--- என்று இடைநிறுத்தினான் மகேசன்.

காந்தன்; இந்தியாவில் நடைபெற்ற பல மன்னர்களின் படையெடுப்புகளால் இவ் கிராம அமைப்புகள் பாதிக்கப்படவில்லையா?

மகேசன்; மன்னர்களதும். அந்நிய தேசத்தவர்களின் படையெடுப்புகளாலும் பல அழிவுகள் வரலாற்றில் நடைபெற்றன. ஆனால் கிராம சமூகங்களின் வடிவங்களில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை. குறிப்பிட்ட பிரதேசத்தை கைப்பற்றும் அரசன் அப்பிரதேசங்கள் தனது ஆட்சிக்குட்பட்டது என்று அறிவிக்கிறான். இக்கிராம சமுதாயங்களும் அதன்படி இப்போதுள்ள அரசனுக்கு தமது வரியை செலுத்த கடமைப்பட்டுள்ளன. இதனால்தான் இந்திய இராச்சியங்கள் மௌரியர், குப்தர்..... என்று காலத்துக்குகாலம் அழிந்து கொண்டும் ஆர்த்தெழுந்து கொண்டும் வந்துள்ளன. மற்றைய ஆசிய கிராம சமூகங்கள் அழியாமலும் மாறுதலையடையாமலும் திகழ்ந்து வந்துள்ளன இன்னும் இந்த வடிவங்களின் எச்ச சொச்சங்கள் நிலைத்தான் செய்கின்றன.

காந்தன்; இந்த கிராம சமுதாயங்களில் வர்க்கங்கள் இருக்கவில்லையா?

மகேசன்; புராதன பொதுவுடமை போலவே ஆசிய உற்பத்தி முறையிலும் நிலத்தில் பொதுவுடமை நிலவியது

www.tamilarangam.net



எவருக்கும் நிலத்தில் நிறைவான தனிச் சொத்து உரிமை கிடை
யாது. சமூக உறுப்பினன் என்ற முறையில் நிலத்தை
உழுது பயிரிட்டு பயன்பெறும் உரிமையே விவசாயிக்கு
உண்டு. ஆனால் மனிதனை மனிதன் சுரண்டும் முறை
ஆசிய சமூகத்தில் இருந்தது. இங்கும் சிறுபான்மையோ
ரின் அதிகமான உழைப்பாளிகள் உற்பத்தி செய்யும்
உரிமையை தனதாக்கி கொண்டது. தத்தம் வாழ்வுக்
குரிய உரிமைகளை அவரவர் அனுபவித்த போதும் வரி
யிலிருந்தோ கட்டாய வேலை வாங்கு வதிலிருந்தோ,
பேரரசு, சிற்றரசு அதிகாரிகளுக்கு... பணிசெய்வதிலி
ருந்தோ இந்த உரிமைகள் மக்களைக் காப்பாற்ற
வில்லை. கிராம சமூகங்களுக்கு சொந்தமான நிலத்தின்
மீது அரசு மேலுரிமை கொண்டாடுவதும், கிராம சமூகங்
களுக்கு தேவையானவற்றை மட்டும் அரசு அங்கீக
ரிப்பதும், அரசன், மந்திரி, பிரபுக்கள், அதிகாரிகள் என்
போர் அனுபவிக்கும் உயர்குடிகளாய் அமைந்தும் இருந்
தனர். சமூகத்தின் அவதார புருசனாக அரசனைக்
கருதி அவனது ஆணைக்கு கட்டுப்பட்டு வாழவேண்டும்
என்பது விதியாக இருந்தது. மீறுவோர் அரசனின்
தண்டனைக்கு தப்பமுடியாது.

நிலம் அரசனின் தனியுடைமையல்ல.
நிலம் அரசுக்கு சொந்தம் என்று கூறும் போது நாட
டின் பல்வேறு சமூகங்களின் கூட்டு வடிவாகவே
அரசு கருதப்பட்டது. விவசாயிகள் எந்த தனிப்பட
டவராலும் சுரண்டப்படவில்லை. சுரண்டும் வர்க்கத்தவர்
சமூகத்திற்கு ஆற்றும் பணிக்கு கைமாறு பெறும்

உரிமையை பயன்படுத்தி அந்த கைமாற்றைவிட கூடு-தலாக சுரண்டலை செய்ய தயங்கவில்லை. அதாவது அரசன், ஆதிக்க சக்திகளின் பிரதிநிதியாக மட்டுமே செயல்படவில்லை, விவசாயத்துக்கு இன்றியமையாத நீர்ப்பாசன வசதியை அமைத்து பேணும் பொதுநலப் பணியிலும் ஈடுபட்டான். உள் நாட்டு சுரண்டல் ஓரளவுக்கு மேல் கிடையாத போது அயலரசுகள் மீது படையெடுத்து கொள்ளையடிப்பது நடந்தது. இந்த கிராம சமூகங்கள் வர்க்க பேதமற்ற பண்டைய சமுதாயத்தின் இறுதி வடிவங்களாகும். அதேசமயம் ஆதிக்கம்புரியும் சிறுபான்மையோர் அரசாங்க அதிகாரத்தை செலுத்துவதாக அமைந்த ஏற்பாடு வர்க்க சமுதாயத்தின் ஆதிவடிவமாகவும் இருந்தது.

காந்தன்; ஐரோப்பியர்களின் படையெடுப்புகள் என்ன மாற்றத்தை ஏற்படுத்தின?

மகேசன்; பிரிட்டனின் படையெடுப்பானது இந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படையை தகர்த்தது. கிராம சமூகம் தன் புராதன நாகரீகத்தை இழந்தது. சமுதாயத்தின் அந்நிய சக்தியாக நின்று கொண்டே பிரிட்டன் கொள்ளையடித்து சுரண்டலை நடத்தியது. ஐரோப்பாவில் நிலப்பிரபுத்துவ சமூகம் அழிந்தபோது பொருளுற்பத்தி சக்திகள் விடுதலையடைந்து வளர்ச்சியடைந்தன. முதலாளித்துவம் வளர்ந்தது. ஆனால் இந்தியாவில் பழைய சமூகம் அழிந்தவுடன் உற்பத்திசக்திகள் வளர்ச்சியடையவில்லை. இந்திய கிராம சமு-கம் அழியாமல் இந்திய மக்கள் மீண்டெழுந்திருக்க

www.tamilarangam.net



முடியாது. சமுதாயப்புரட்சி நடைபெறவும் முடியாது. ஆனால் பிரிட்டன் தன் சுரண்டலை பெருக்கவும், விரைவுபடுத்தவும் லாபம் பெறவும் செய்த முயற்சிகள் எதிர்முறையில் சில நன்மைகளை இந்த சமுதாயத்திற்கு அளித்தது. இந்தியாவின் சகல பிரதேசங்களிற்கும் இராணுவத்தை கொண்டு செல்லவும் பண்டங்களை விற்பதற்கும் மூலப் பொருட்களை எடுப்பதற்கும் பிரித்தானியா இரும்பும், நிலக்கரியும் உள்ள நாட்டில் இரயில் பாதைகள் வலைப்பின்னல் போல போட்டது. அவற்றின் தேவைகளை முன்னிட்டு இன்றியமையாத சில தொழில்களை தொடங்கவும் முன்வந்ததால் அவற்றுடன் தொடர்பில்லாத வேறுசில தொழில்களும் இயந்திரமாவதை தடுக்க முடியாது போயிற்று. தன் சொந்த நலனை முன்னிட்டு பிரிட்டிஷ் ஆட்சி வேண்டா வெறுப்பாக நவீன கல்வியளித்தது. இறுதியில் பிரிட்டனில் தன் நலம் கருதி செய்த இந்த முயற்சிகள் இந்தியாவில் பழப்பாளிகளும் நவீன முதலாளி, தொழிலாளி மத்திய வர்க்கங்களும் தோன்றுவதற்கு வகை செய்தது. கிராம சமூகத்தின் கூட்டு உடைமையாகவிருந்த நிலம் தனிப்பட்டவர் உடைமையாகியது. நிலத்தை விற்க, வாங்க அடமானம் வைப்பது போன்ற சட்டங்கள் கொண்டுவரப்பட்டது. ஜமீன் முறை புகுத்தப்பட்டது. 'சுயாட்சி' நடைபெற்ற கிராமங்கள் அழிக்கப்பட்டன. இன்று இத்தகைய கிராம சமுதாய அமைப்புகளை காணமுடியாது. இவற்றின் எச்சசொச்சங்களாக சில வடிவங்கள் இருக்கின்றன என்று சொல்லலாம். என்று க நி மகேசன் நிறுத்தினான்.

— முற்றும் —

www.tamilarangam.net



திரைப்பட விமர்சனம்:

# ☼ பாரதிராஜாவும் என்னுயிர்த்தோழனும் ☼

வழமையாக தமிழ்த் திரைப்படங்கள் கவ-னிக்க மறுக்கும் சேரிமக்களின் பக்கம் கமரா திரும்-பியிருக்கிறது. முழுக்க முழுக்க சென்னையில் வாழும் சேரி மக்களையே மையமாக வைத்து எடுக்கப்பட்ட திரைப்-படம். இந்திய திரைப்பட விழா தெரிவுக்கு அனுப்பப்-பட்ட படம். பாரதிராஜாவின் வித்தியாசமான முயற்சி. என்றெல்லாம் இப்படத்தைப்பற்றிய பத்திரிகைகளின் கணி-ப்பைத் தொடர்ந்து இப்படத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் என்போன்ற பலருக்கு ஏற்பட்டது. ஆனால் பின்பு படத்தை பார்த்த போதும், பத்திரிகைகளில் இது பற்றிய பாரதிராஜாவின் பேட்டியைப் படிக்க நேர்ந்த போதும், அவரையும் அவரது 'படைப்பு' நோக்கத்தையும் தெளிவாக இனம் கண்டு கொள்ள முடிந்தது.

"இதுவரை கிராமங்களை சுற்றிக் கொண்டி-ருந்த இந்த பாரதிராஜா, தனிமனிதனை நின்று பார்ப்ப-தை விட, இந்த சமூகத்தின் பொது மனிதனாக, ஒரு கலைஞனாக, சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பை உணர்ந்து கொண்ட போது... பிறந்ததுதான் இந்த என்னுயிர்த் தோழன்"...... என்ற பாரதிராஜாவின் முன்னுரையைக் கேட்டவுடன் சற்று நிமிர்ந்து உட்கார்ந்தோம்.

தமிழகத்தின் இன்றைய சாக்கடை அர-சியல் சூழ்நிலையில் பிழைப்புவாத, வோட்டுப் பொறுக்கிக்

www.tamilarangam.net



கட்சிகளின் மித்ராட்டங்களுக்கு கட்சியின் அடி மட்டத் தொண்டன் ஒருவன் எவ்வாறு பலியாகிறான். என்பது தான் படத்தின் மையக் கரு. குப்பைத் தொட்டி-யில் அனாதரவாகக் கிடந்த குழந்தையை எடுத்து வளர்க்-கிறாள் ஒரு பெண். அக்குழந்தைதான் படத்தின் நாயகன் தருமன். இப்பத்து இளைஞன் தருமனின் கட்சி வெறி, சிறையிலிருக்கும் கட்சித் தலைவருக்காக தீக்குளிக்க முயற்சி செய்வது, எதிர்க்கட்சியைச் சேர்ந்த சாராய வியாபாரி வீட்டில் பெண் எடுக்க மறுப்பது, திருமணமாகி மனைவியை அழைத்துக் கொண்டு தலைவரிடம் வாழ்த்-துப் பெறச் சென்று ஏமாந்து திரும்புவது, சினிமாவுக்கென புறப்பட்டு வழியில் கட்சிக் கூட்டத்திற்கு மனை-வியை அழைத்துச் செல்வது கூட்டத்தில் மனை-வியைத் தனியே விட்டுவிட்டு ஓடி தலைவன் தரிசனத்துக்காக அலை மோதுவது, தன் தொகுதிக்கு தலைவன் அறிவித்த வேட்பாளன் தான் தன் மனை-வியை ஏமாற்றிய அயோக்கியன் என்று தெரிந்ததும் விம்மி வெடிப்பதும் மீண்டும் தலைவனின் போதனைக்கு கட்டுப்பட்டு வெறித்தனமாக கட்சி வெற்றி பெற இரவுபகலாக உழைப்பது போன்ற காட்சிகள் இய-ல்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. இன்றைய தமிழக சூழ்நிலையில் தருமனின் பாத்திரம் ஒரு பானை சோ-ற்றுக்கு ஒரு சோறு.

பாத்திரங்களை ஏற்று நடித்துள்ள-வர்கள் மிக இயல்பாக நன்றாக நடித்துள்ளார்கள். அரசியல் கட்சிப்பிரமுகர்களுக்குப் பெண்களை வினியோகிக்

www.tamilarangam.net



-கும் டெல்லியாயும், இப்பகுதி இடிகாரப் பெண்ணாக வரும் வடிவுக்கரசியும் இயல்பான நடிப்பால் அசத்தி-யிருக்கிறார்கள். கட்சியின் பித்தலாட்டங்களுக்கு அறி-யாமையால் பலியாவதிலாகட்டும், இப்பகுதி சிறுவர்களுக்-கு நல்லதைச் செய்ய ரகசியத்தனம் காட்டி அட்ட-காசம் பண்ணுவதிலாகட்டும், தருமனாகவரும் (புதுமுகம்) நாயகன் பாபு யார் இவர் எனக் கேட்க வைக்கிறார். ஆனாலும் சிற்பியின் என்ற சமூகத்தை விட்டு அந்நியப்-பட்டிருக்கும் கிழவன் பாத்திரம், படத்தை விட்டே அந்நியப்பட்டு நிற்கிறது. தலைப்புக்கு பொருத்தமாக இருக்க வேண்டும் என்பதற்காக தருமனின் நெருங்கிய நண்பன் சாமியையே அவனைக் கொலை பண்ணுவதற்-காக தேர்ந்தெடுப்பதும், அவன் தனிமையில் தருமனிடம் அழுது கொண்டே கத்தியால் குத்துவதும் [பணத்திற்காக என்ற போதும்] அந்த மன நிலையில் அந்தப் பாத்திரத்-தால் செய்யக் கூடியது என்பது மிகவும் செயற்கை-யாகவுள்ளது.

வழமையாக தமிழ்ப்படங்களில் கதையுடன் ஒன்றித்து ரசித்துக் கொண்டிருக்கும் பொழுது பாடல் காட்சிகள் புகுந்து படத்திலிருந்து 'அந்நியப்' படுத்தி விடும். இதிலும் பாரதிராஜா எங்கே ரசிகன் வியாபார ரீதியாக தன்னை நிராகரித்துவிடக்கூடாது என்பதற்காக தன-து பழமையான காதல் காட்சிகளையும், கிராமத்து பின்-னணியையும் சேர்த்துவிடுகிறார். அதுமட்டுமல்லாமல் இன்-றைய தமிழகச் சூழலில் இல்லாத காட்சிகளை மிகை யாக (சினிமாத்தனமாக) காட்டி அந்நியப்படுத்தி விடுகிறார் இதற்கு ஆளும் கட்சியாக வரத்தகுதியுள்ள ஒருகட்சி

www.tamilarangam.net



தனது மகளிர் அணிக்கு, ஊரறிந்த விபசாரியே தலைவியாக வருவது போன்ற காட்சிகளை காரணமாக குறிப்பிடலாம் அதே போலவே தனது வழமையான பூநூலை அறுத்தெறிவது, புத்தகங்களை எரிப்பது, தாலியை அறுப்பது என்றபாணியில் இப்படத்து மக்களே கிளர்ந்தெழுந்து உடனே அரசியல்வாதிகளையும், பொறுக்கிகளையும் தீர்த்துக் கட்டி விடுவதாக மிகவும் செயற்கையாக முடிவை கொடுத்து ரசிகனை சிந்திக்க விடாமல் திருப்திப்படுத்தி விடுகிறார். மாறாக தருமன் கொல்லப்படுவதுடன் அவன் மனைவி நிர்க்கதியாக விடப்படுவதாகவோ அல்லது, உண்மையறிந்த இப்படத்து மக்கள் தங்கள் கோபத்தைக் காட்ட வாக்களிக்காமல் விடுவது போன்ற வேறு வழிகளை நாடியிருந்தாலோ அது இயல்பாகவும் படம் பார்ப்பவர்களைப் பாதிப்பதாகவும் இருந்திருக்கும். எங்கே ரசிகர்கள் அப்படியெல்லாம் சிந்தித்துவிடப் போகிறார்களோ என்பதிலும், இன்றைய சீரழிவு அரசியல் கட்சிகளிலும், அதிகார வர்க்கத்தின் மீதும் எதிர்ப்புணர்வு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதிலும் அக்கறையாக இருந்திருக்கிறார். கட்சித் தலைவர்களே சொந்த காரணங்களுக்காக கொலை செய்வதாகக் காட்டுவதும், கீழ்மட்டத்திலுள்ள பொலிஸ்தான் ஊழல் மோசடி பண்ணுவதாக மட்டும் காட்டுவதும், பாரதிராஜா இன்றைய அரசியல்வாதிகளையும், அதிகாரவர்க்கத்தையும் பகைக்காமல் தனது இருப்பை காப்பாற்றுவதில் ரொம்பத்தான் கவனமாக இருந்திருக்கிறார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாக்கியராஜ், இப்படத்தில் வரும் நடிகன் அரசியல்வாதியாக மாறுவது என்ற பாத்திரம் தன்னை கிண்டல் பண்ணுவதாக குறிப்பிட்டதும், அப்படியெல்லாம் இல்லை, பாக்கியராஜ் திறமானவர் என நற்சான்றிதழ் வழங்கியதும், பத்திரிகைகள் புத்திஜீவிகள் மட்டத்தில் இப்படம் எடுத்தது தனது கடமை எனச் சொல்-லிக் கொண்டே சாதிகளை அரசியல்வாதிகளின் கால்-களில் விழுவதும், பொதுமக்களால் ஏன் சினிமா நடி-கர்களால் கூட வெறுத்து ஒதுக்கப்படும் ஆபாச சீர-ழிவுப் பத்திரிகையான "திரைச் சித்ரா" விழாவில் கலந்து கொண்டதும், இந்திய திரைப்பட விழா தேர்வுக்கு அனுப்பும் போது படம் வெற்றி பெறும் என்ற நோக்-கில் பாடல் காட்சிகள் இன்ன பிறவற்றை நீக்கி விட்டு அனுப்பியதும், அங்கே நிராகரிக்கப்பட்டு திரும்பிவந்தவுடன் அவற்றை இணைத்து திரையிட்-டதும் இந்த இரட்டை வேட வியாபாரியை நன்கு இனம் காட்டுவதாகவுள்ளது.

இங்கு இப்படத்துக்கு விமர்சனமா? அதன் இயக்குனர் பாரதிராஜாவுக்கு விமர்சனமா? என்ற கேள்வி எழலாம். சாதாரண இயக்குனர்களாயின் இது முக்கியத்துவமானதல்ல. ஆனால் சமூகத்தின் "தார்மீகப்" பொறுப்புபற்றி பாரதிராஜா பேசுவதால், தன்னை அப்-படி இனம் காட்டிக் கொள்ள முனைவதால் இது தவிர்க்க முடியாததாகிறது. நோக்கம் வியாபாரம் என்-றான பின் படைப்பின் சமூகப் பொறுப்பு தார்மீகப் பொறுப்பு என்பதெல்லாம் வெறும் கண்துடைப்பாகிறது

(தொடர்ச்சி 59ம் பக்கம்...)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# படிப்பினை தரும் படுகொலைகள்

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிச் செயலாளர் பத்மநாபா உட்பட அவ் இயக்கத்தைச் சார்ந்த 15 பேர் கொலைவெறியர்களினால் படுகொலை செய்யப்பட்ட செய்தி யாவரும் அறிந்ததே! "சென்னையில் நிகழ்ந்த கொலைவெறியாட்டம்" என்று இந்தியப் பத்திரிகைகளினால் வர்ணிக்கப்படுகின்றது. ஆம்! இக் கொலை வெறியரின் எதிரிகள் என்று கருதப்படுகின்ற EPRLF ஐச் சார்ந்தவர்கள் மட்டுமன்றி 6 வயதுக் குழந்தை உட்பட வீதியில் சென்ற கோடம்பாக்கத்தைச் சேர்ந்த அப்பாவி இந்தியர்கள் பலரும் கொலை வெறியர்களினால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர். குடியிருப்புப் பகுதியை இருளில் ஆழ்த்துவதற்காக மின்சாரத்தைக் கட்டுப்படுத்திச் செல்லும் "ராண்ஸ்போமர்" [Transfomer] துப்பாக்கி வெறியரினால் தாக்கப்பட்ட போது அது பலத்த சத்தத்துடன் வெடித்திருக்கிறது. இத்துப்பாக்கி வெறியரின் செயலினால் சென்னை நகரமே நடுநடுங்கித் திகிலடைந்துள்ளது.

இயக்கத் தலைவர்களை அழிப்பதன் மூலம் இயக்கத்தையே ஒழித்துவிடலாம் என்று கருதுகிறது பாசிசம். பாசிச வெறியரின் இக் கருத்து வலிமை பெறுவதற்கு EPRLF உட்பட தமிழீழ இயக்கங்கள் ஓரளவுக்குத் துணைபுரிந்துள்ளன என்பதை நாம் நுனித்துக் கவனிக்க வேண்டும்.

www.tamilarangam.net


EPRLF இன் ஆரம்பகால நடவடிக்கைகளின் போற்றத்தக்க அம்சங்களை நாம் மறப்பதற்கில்லை.

— புத்தூர்ப் பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களின் காணிப்பிரச்சனை, சாதிப்பிரச்சனைகளில் இயலுமான அளவுக்கு முதன்மை கொடுத்தமை.

— வெகுஜன அமைப்புகளைக் கட்டியெழுப்புவதில் ஏனைய இயக்கங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தமை.

— தமிழர் விடுதலைக் கூட்டணியை அம்பலப்படுத்துவதில் பேரளவு வெற்றி பெற்றமை.

ஆனால் இதே EPRLF.....

இயக்கங்களின் ஒற்றுமை, ஐக்கியத்தை வலியுறுத்தி அதற்கான முயற்சியில் ஈடுபட்ட அதே போது...

— பாசிச இயக்கங்களை இனங்காணத் தவறியது.

— NLFT, மக்கள் பாதுகாப்புப் பேரவை போன்ற நற்சக்திகளை சிறிய இயக்கங்களாகக் கருதி அவர்களின் வளர்ச்சியை அலட்சியப் படுத்தி தங்கள் கூட்டுக்குள் இணைக்க மறுத்தது.

TELO இயக்கம் அழிக்கப்பட்ட பின்பு அடுத்து தமது இயக்கம் அழிக்கப்படலாம் அல்லது தடைசெய்யப்படலாம் என்பதை அறிந்து 'ஈழச் செய்தி' பத்திரிகையில் கண்டிப்புகளை எழுதிவிட்டு, அதற்கெதிராக எச்சரிக்கை கொள்ளத் தவறியது.

மேலும் தடை செய்யப்பட்ட பின்பு சொந்த அரசியல் இராணுவ வளர்ச்சியினூடாக எதிரியை

www.tamilarangam.net



வெற்றி கொள்வதற்குப் பதிலாக...... இந்திய உளவுப் படைகளிடம் தஞ்சமடைந்து, இந்திய அரசின் சூழ்ச்சிக்குப் பலியாகி இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை ஈழத்தில் நிலைநிறுத்துவதற்குத் துணைபுரிந்ததன் மூலம் மறந்துவிட முடியாத கறைபடிந்த வரலாற்றை உருவாக்கியது.

“என்ன இருந்தாலும் ‘EP’ ஒரு இடதுசாரி இயக்கம்தானே” என்று கருதுபவர்கள் EPRLF இன் துரோகத்தனத்திற்கான மூலம் எங்கிருந்து தொடங்குகிறது என்பதை நோக்கவேண்டும். சர்வதேச நிலைப்பாட்டில் தமது ‘ரசிய சார்பை’ ரசியாவுக்கு வெளிக்காட்டுவதற்காக பகீரதப்பிரயத்தனத்தில் ஈடுபட்டது. இந்திய மாநில ஏஜெண்டான கல்யாணசுந்தரத்திடம் இணைந்தது. இந்திய அரசை முற்போக்கு சக்தியாகக் கணித்தது. ஈழ விடுதலைக்கு இத்தகைய வல்லரசு நாடுகளிடம் தங்கியிருப்பது அவசியம் எனக் கருதியது. ‘ரோ’ (RAW), உளவுப்படையிடம் தம்மை மாட்டிக் கொள்வதை பெருமையாக்கிக் கொண்டது. இவர்களது இத்தகைய நிலைப்பாடுகள்தான் இறுதியாக இந்திய இராணுவம் உள்நுழைவதற்கான துரோகச் செயல்களுக்கு வழி வகுத்தது.

தமது எதிரிகளை அழிப்பதாக நினைத்து எந்தப் பாசிசத்தால் தடை செய்யப்பட்டனரோ அதே பாசிசத்தை தமது கரங்களில் தூக்கினர். விடுதலைப் புலிகளுக்கு உணவளித்த சாதாரண மக்களைக் கூட சித்திரவதைக்குட்படுத்தினர். இந்திய இராணுவத்தின்

www.tamilarangam.net



தலையாட்டியாகச் செயற்பட்டனர். ஒட்டு மொத்தத்தில் எதிரிகளை அழிப்பதாக நினைத்து அப்பாவி மக்கள் மீது அதுவும் ஆக்கிரமிப்புப் படையின் துணையுடன் பாசிசத்தைப் பரப்பினர். EPRLF யினதும் இவர்களுக்குத் துணை நின்ற ஏனைய இயக்கங்களினதும் இத்தகைய அராஜக நடவடிக்கைகளினால் இவர்கள் மக்களின் பால் மிக ஆதரவை இழந்தனர்.

ஏனைய இயக்கத் தலைவர்களுடன் ஒப்பிடப்படும் போது பத்மநாபா பல அம்சங்களில் மேன்மையானவர், இயக்கத்திற்குள்ளும் சரி, இயக்கத்தில் இருந்து வெளியேறியவர்கள் மீதும் சரி அராஜகப் போக்கைக் கடைப்பிடிக்காத ஒரு ஜனநாயகவாதி, மனித நேயம் மிக்கவர். என்ற கருத்துக்கள் பத்மநாபாவின் தனிப்பட்ட குணாம்சங்களுக்கு உரமூட்டுகின்றன.

ஒரு மனிதன் சமூகத்தின் சாதாரண மனிதனாக வாழும் பட்சத்தில் மட்டுமே அவனுடைய தனிப்பட்ட குணாம்சங்கள் அவனுடைய நன் மதிப்புக்கு மெருகூட்டுகின்றன. ஆனால் ஒரு இயக்கத்தின் தலைவன் என்ற மேலாண்மையைப் பெற்றுக் கொள்கின்ற போது, அவ் இயக்கத்தின் உடலும் உயிருமாகவே அவனைக் காண முடியும், பார்க்க முடியும். இந்த வகையில் EPRLF மக்களுக்கு இழைத்த துரோகத்தனத்தில் இருந்து பத்மநாபாவை வேறுபடுத்திவிட முடியாது! பிரித்துவிட முடியாது!.

சிறிய சக்தியானாலும் சொந்தக் காலில்,

www.tamilarangam.net



சொந்த மக்களில் தங்கி நிற்பதே விடுதலை இயக்கங்க ளுக்குரிய சரியான மார்க்கம் என்பதை EPRLF உம் இவர்களைப் போன்ற ஏனைய கும்பல்களும் இன்னும் படிப்பினையாகப் பெற்றுக் கொள்ளவில்லை.

கொலை செய்யப்பட்டவர்கள் துரோகிகளே! அதேவேளை கொலைவெறியரின் இம்மாதிரியான கொலைகள், அரசியல் கிரிமினல்கள், இனத்துரோகி களுடன் மட்டுமே முடிந்துவிடும் என்று யாரும் பிர மையடைந்துவிட முடியாது. இவர்கள் அந்நிய தேச மொன்றில் வாழும் இலங்கையர் மீதும் தமது கொலை வெறியைக் கட்டவிழ்த்துவிட்டதன் மூலம் சர்வதேச -மும் அறியும் வண்ணம் தமது பாசிசக் கோர முகத்தை வெளிக்காட்டியுள்ளனர்.

• கி. வாசன் •

---

(---- 21 ம் பக்கத் தொடர்ச்சி)

களில் உள்ள பேட்டை நெரிசலின் காரணம்காட்டி பரம் பரைபரம்பரையாக வாழ்ந்த மக்கள் இப்பூமியிலிருந்து அடித்து விரட்ட நினைத்து மனிதத்தன்மையும் அற்றது மனிதநாகரிகமும் அற்றது. இந்நோக்கிலேயாது இலங்கையிலிருந்து இம்மக்க ளை விரட்டியடிக்க உத்தேசிக்கும் அரசின் மனிதாபிமான மற்ற நடவடிக்கையை மலையகம் உட்பட தென்னில ங்கை முற்போக்கு சக்திகளும் படைக்கின்ற சகல அமைப்புக் களும் எதிர்த்து வருகின்றன. இவ்வெதிர்ப்புணர்வுகள் மேலும் வடிவமைக்கப்பட்டு குடியுரிமை பெற்ற மக்களை நாடுகடத்தும் அரசின் திட்டத்தை முறியடித்தேயாக வேண்டும். அத்துடன் இம்மக்கள் இலங்கையில் வா மான வாழ்வு வாழ்வதற்கும் வழி வகுக்க வேண்டும்.

• குகன்

www.tamilarangam.net

**சிறுகதை**

# பதுங்குகுழி

ஆனந்தி

படலைச் சத்தம் கேட்டுத் திரும்பிய பொன்னையர் "அட சின்னனே வா.. வா.. இண்டைக்கு எப்பிடியும் இந்த வேலையை முடிச்சுப் போட வேணும்" என்று வந்த சின்னனிடம் கூறி விட்டு மனைவியிடம் திரும்பி "இஞ்சேரும் கனகம் இவன் சின்னன் வந்திருக்கிறனப்பா ஏதாவது சாப்பிடக் குடுத்துவாரும் பதுங்குகுழி வெட்டி முடிக்க வேணுமல்லே"... கூறியவாறு பதுங்குகுழி வெட்டுவதற்கான ஆயத்தங்களை செய்யத் தொடங்கினார்.

மண்வெட்டியையும், இரண்டு கடகங்களையும், கணையும் எடுத்துவைத்து விட்டு உடனே ஞாபகம் வந்தவராய் "கனகம்"... கூப்பிட்டவாறு அடுப்படியுள் நுழைந்தார். "நான் நேற்று சொன்னது மாதிரி ஒரு கோப்பையிலும் ஒரு பேணியிலும் எல்லாத்தையும் குடுமப்பா... பிறகு சாண் போட்டு உரஞ்சிக் கழுவலாம்தானே..." என்று மெதுவாக மனைவியின் காதருகே சொன்னார். "எனக்குத் தெரியுமப்பா நீங்க போய் அவனுக்கு இடத்தைக் காட்டுங்க நான் சாப்பாடு எடுத்துக் கொண்டு வாறன்.." என்றவாறு கனகம் சாப்பாட்டிற்கு ஆயத்தம் செய்தாள்.

பொன்னையர், கனகம் தம்பதிகள் என்றால் அந்த ஊரில் ஒரு பெரிய உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்கள். பொன்னையர் என்றாலே சாதித்திமிர் பிடித்தவர் என்று எல்லோருக்கும் தெரியும். அன்றைய பதுங்குகுழி வெட்டுவதற்கு சின்னனை வரச்சொன்ன போது சின்ன

www.tamilarangam.net


-ளுக்கு போக மனமில்லைதான். ஆனாலும் என்ன செய்-வது இப்பொழுது நாட்டில நடக்கிற பிரச்சினையில வெளிய போயும் வேலை செய்யமுடியாது. இவரைப் பகைச்சுக் கொண்டு வாழவும் முடியாது. எதோ பதுங்கு-குழியை வெட்டிப் போட்டு தாற காசை வாங்கிக்கொண்டு போவம் என்று வந்திருந்தான்.

அந்த காணி முனையில் உள்ள வேப்ப மரத்தின் கீழ் வெட்டத் தொடங்கினார்கள். பொன்னையர் பதுங்குகுழியை "T" மாதிரி வெட்டச் சொன்னார். அவரும் கூட ஒத்தாசை புரிந்தார். பதுங்குகுழி வெட்டி.. மண் போட்டு பைகளையும் கட்டி... யாவும் முடிய பின்னேரம் ஆகிவிட்டது. வேலை முடிந்து சின்னனும் சம்பளத்தை வாங்கிக்கொண்டு போய்விட்டான்.

"கனகம் அவன் சின்னன் சாப்பிட்ட கோப்பையும், பேணியையும் எடுத்துக் கொண்டு வாவ-னப்பா சாணி போட்டுக் கழுவ --" என்றவாறு மேல் கழுவவென்று கிணற்றடிக்குப் போனார்.

கனகம் கிணற்றடியில் சின்னன் சாப்பிட்ட கோப்பையையும், பேணியையும் கழுவிக் கொண்டிருந்தார். பொன்னையர் மேல் கழுவிவிட்டு துடைத்துக் கொண்டிருந்தார். திடீரென எங்கோ தூரத்திலிருந்து 'ஹெலி' சுட்டுக் கொண்டு பொன்னையரின் வீட்டுப்பக்கம் வருவது போல் கேட்டது. "கனகம் ஓடி வாருமப்பா எங்கயோ 'ஹெலி' சுட்டுக் கொண்டு வருகுது"... என்றவாறு பதுங்குகுழியை நோக்கி ஓடினார். "இந்தா வாறனப்பா...." என்றவாறு கனகமும் பதுங்குகுழியை நோக்கி ஓடினார். சின்னன் சாப்பிட்ட கோப்பையும், பேணியும் கிணற்றடியில் கேட்பாரற்றுக் கிடந்தது.

www.tamilarangam.net



உலக நடப்பு

# ⁕ சோவியத் யூனியன் ⁕

**அ) தேர்தல் :** யூலை மாதம் 12ம் தேதி கம்யூ. கட்சியின் 28 வது மாநாடு நடைபெற்றது. இம் மகாநாட்டில் உதவி பொதுச்செயலாளருக்கான தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தலில் மிக்கயில் கொர்பச்சேவினால் தெரிவு செய்யப்பட்ட வால்திமீர் இவாஸ்கோ (Waldimir Iwasko), கன்சவேற்றிவ் வின் ஜெகர் லிகாட்சோ (Jegor Ligatschow) விற்கு எதிராக போட்டியிட்டு 3109 வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார். ஜெகர் லிகாட்சோ 776 வாக்குகளைப் பெற்று தோல்வி கண்டார். இம் மாநாட்டில் 4700 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வால்திமீர் இவால்கோ. இவர் 1932 ம் ஆண்டு உக்ரேன் மாநிலத்தில் ஓர் தொழிலாளிக்கு மகனாகப் பிறந்தார். 1960 களில் உக்ரேன் மாநில கம்யூனிஸ்ட் கட்சியுடன் தன்னை இணைத்துக்கொண்டார். 1973 களில் கட்சியின் விஞ்ஞான தத்துவார்த்தத் துறையில் தனது செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தார். 1980 இல் ஆப்கான் ஜனாதிபதி பாபராக் கர்மாலிற்கு ஆலோசகராக காபூலில் இருந்து செயற்பட்டார். இராணுவ ஆலோசகராக இஸ்லாமன் ஆப்கான் மக்கள் கட்சியின் அரசியல் வேலைகளை கண்காணித்து வந்தார்.

1986 இல் உக்ரேன் மாநில கம்யூ. கட்சியில் சித்தாந்தத் துறை தலைவராக கடமையாற்றினார். 1987 இலிருந்து சோவியத் கம்யூ. கட்சியின் பொலிற் பீரோ வில் முழுநேர பிரதிநிதியாக உள்ளார்.

## ஆ) கட்சியில் உடைவு :





பொறிஸ் யெல்சின் (Boris-Jelzin) எனும் சீர்திருத்தவாதி இம் மாநாட்டில் 110 அங்கத்தவர்களுடன் பிரிந்து சென்றுள்ளார். இவர்களின் முக்கிய பேச்சாளர் ஒருவர் இவ் வருடம் இலையுதிர் காலத்தில் தாம் ஆரம்பிக்க இருக்கும் ஜன நாயக் கட்சிக்கான காங்கிரஸ் கூட்டப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சீர்திருத்தவாதியான யெல்சின் இரண்டு வருடமாக பொலிற் பீரோவிலிருந்து நிறுத்தி வைக்கப் பட்டிருந்தார். இவர் கோர்பியின் செயற் பாட்டிற்கு தீவிர எதிர்ப்பாளரும் ஆவார். இவ் வருடம் மே மாதம் சோவியத் குடியரசின் தலைவர்களில் ஒரு வராகத் தெரிவுசெய்யப் பட்டிருக்கும் இவர் 29 வருட ங்களாக கம்யூ. கட்சியிலிருந்து செயற்பட்டு வந்தவர். இம் மாநாட்டில் வெளியேற்றத்திற்கான விளக்கத்தினை யெல்சினிடம் 'கோர்பி' கோரியிருந்தார். அதற்கு யெல்சின் வரட்டுத்தனமான சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு வெளியேறினார்.

www.tamilarangam.net


# ★ தூதரக அகதிகள் ★

## அ) அல்பேனியா :




அல்பேனியாவின் தலைநகரான திரானா (Tirana) இல் ஆயிரக்கணக்கான மக்கள் ஐரோப்பிய தூதரகங்களில் தஞ்சமடைந்துள்ளனர். செக்கோஸ்லவாக்கியா தூதரகத்தில் தஞ்சமடைந்தோரில் (49 ஆண்களும் 2 பெண்களும்) இரு இளைஞர்களைத் தவிர மற்றையோர் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, மேற்கு-ஜேர்மனி, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளுக்கு செல்ல விரும்புவதாக அறிவித்துள்ளனர். இதுவரை 3000 பேர் ஜேர்மனியிலும், 800 பேர் இத்தாலியிலும், 550 பேர் பிரான்சிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். இத்தாலியில் மேலும் கப்பல்கள் அகதிகளை ஏற்றி வரத் தயாராக இருக்கின்றன.

•••••

**ஆ) கியூபா :** யூலை 11ம் தேதி கியூபாவில் உள்ள செக்கோஸ்லவாக்கியா தூதரகத்தில் 7 பேர் தஞ்சம் கோரியுள்ளனர். இவர்களில் ஐவர் தாம் கிறிஸ்தவ ஜனநாயகவாதிகள் எனவும், தாம் அரசிற்கு எதிரானவர்கள் என்றும் தெரிவித்துள்ளனர். இவர்கள் பற்றி பிடல் கஸ்ரோ கூறும்போது, 'எந்தவித அரசியல் செயற்பாடுமற்ற ஒம்பன்கள்' என வர்ணித்தார்.

www.tamilarangam.net

# * பூமி அதிர்ச்சி *

## ஈரான்:




கடந்த யூன் மாதம் 21ம் தேதி ஈரானின் Astaneln, Lahijan, Zanjan, Langarud என்ற பகுதிகளில் நடந்த பூமி அதிர்ச்சி உலகையே உலுக்கியது. ஆரம்பத்தில் 200 பேர் இறந்ததாக வெளிவந்த செய்தி வேகவேகமாக 50,000 பேருக்குமேல் இது உயிரைக் காவு கொண்டதாக தெரியப்படுத்தியது. இச் சம்பவம் நடந்ததும் உலக நாடுகள், பல உதவி நிறுவனங்கள் உதவி செய்ய முன்வந்தன. மருந்துப் பொருட்களை ஏற்றி வந்த அமெரிக்க விமானம் விமான நிலையத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டது. வெறும் கண்துடைப்புக்கு செய்ய வந்த உதவி என ஈரான் அரசு காரணம் கூறியது. ஈராக் மனிதாபிமான அடிப்படையில் உதவிசெய்தது. மேலும் சல்மான் ருஸ்தியும் 8500 அமெ. டொலர்களை உதவியாக வழங்கியதை தொலைக்காட்சிகள் விளம்பரம் செய்தன.

...•...

## பிலிப்பைன்ஸ்:

மணிலாவிலிருந்து 90 கி.மீற் தொலைவிலுள்ள Cabanatuan எனும் இடத்தில் யூலை 16 ம் தேதியன்று பூமியதிர்ச்சி ஏற்பட்டது. இதன்போது 1000 க்கு மேற்பட்டோர் பலியாகியும் 10,000 க்கு மேற்பட்டோர் படுகாயமுற்றும் உள்ளனர். ஓர் பாடசாலை கட்டிடம் இடிந்து விழுந்ததில் 80 மாணவர்கள் பலியாகினர்; பல சிறுவர்கள் காணாமல் போயுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ● நிக்கரகுவா வில் வேலைநிறுத்தம் ●

நிக்கரகுவாவில் 90,000 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் அரசிடம் பல கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தத்தில் குதித்தனர். இவ் வேலைநிறுத்தத்திற்கு சான்டினிஸ்டாக்களின் தொழிற்சங்கங்களே தலைமை வகித்தன. ஜனாதிபதி சமோரா வின் ஆதரவாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட கைகலப்பில் 6 பேர் கொல்லப்பட்டனர். யூலை 11 ம் திகதிவரை சமோராவின் U.N.O அரசு 'சகோதர உதவியை' அமெரிக்காவிடம் கோரியிருந்தது. இதனைத் தொடர்ந்து வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டங்கள் உக்கிரமடைந்தன.

11 ம் தேதியன்று நள்ளிரவு சமோரா சில கோரிக்கைகளுக்கு உடன்பாடு தெரிவித்து மேலும் சில கோரிக்கைகளை பரிசீலிப்பதாக அறிவித்தார். அதனைத் தொடர்ந்து வேலைநிறுத்தம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டது.

● உடன்பாட்டுக்கு வந்த கோரிக்கைகள் ●

* மாதாந்த சம்பளம் 43% அதிகரிக்கப்படும்.
* வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட மாட்டார்கள்.
* மாணவர்களிற்கும் தொழிலாளர்களிற்கும் இலவச பிரயாண வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.
* அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சின் கணக்கு விபரங்கள் வெளிப்படையாகக் காட்டப்படும்.

► தொகுப்பு ம. நரேந்திரன் ◄

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலையகத்திலிருந்து ஓர் குரல் ***

தோழர்களே இலங்கையின் மலையகத்தில் தற்போது ஏற்பட்டுள்ள மிக மனவருத்தமான மனிதாபிமானமற்ற தமிழ்ச் சமூகம் நாடு கடத்தல் செய்தி - இது பரவலாக எமது நாட்டில் தற்போது மக்கள் மத்தியில் எழும் பிரச்சினையாக - மலையக தமிழர் மத்தியில் பெரும் பரபரப்பையும் கேள்விக்குறியையும், நாடு கடத்தப்படவென சிலுத்தப்பட்ட தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களை எதிர்கால சிந்தனையில் பெரும் பீதியையும் நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. 1987 இனக்கலவரத்தைத் தொடர்ந்தும் வட கிழக்கு யுத்தங்களின் போதும் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்கள் - இந்திய கடவுச்சீட்டுப் பெற்றவர்கள் - தாயகம் திரும்பி புனர்வாழ்வினை ஏற்படுத்த முடியாமற் போய்விட்டார்கள். 1987 இற்கு முன் தாயகம் திரும்பவென தமது பதிவுகளையும் கொடுப்பனவுகளையும் தோட்டங்களிலிருந்து பெற்றுக்கொண்டு தயார் நிலையில் இருந்தவர்கள் இந்த யதார்த்த சம்பவங்களால் தமது புனர்வாழ்வினை அச் சந்தர்ப்பத்தில் ஏற்படுத்த முடியாத நிலைக்கு அரசால் தள்ளப்பட்டனர். அன்று முதல் இவர்கள் தோட்டங்களில் வேலை கொடுக்கப்படாமையும், இதன் காரணமாக தாம் பெற்ற பணத்தினை வாழ்க்கைச் செலவிற்காக அழித்துவிட்டு தமது உடமைகளை எஞ்சிய தட்டுமுட்டுக்களையும் விற்று வயிற்றைக் கழுவிய இந்தத் தோட்டத் தொழிலாளர்கள் சுமார் ஒன்றரைகால் லட்சம் பேரும் எவ்வாறு தாயகம் திரும்பி புனர்வாழ்வை ஏற்படுத்த வாய்ப்பு உண்டு ???

www.tamilarangam.net



வேறு நாடொன்றில் குடியேறும்போது அவர்களுக்கு மூலதனம் அவசியமில்லையா? இவ்வளவு காலமும் இலங்கையின் பொருளாதார ஏற்றத்திற்கு உழைத்த இந்த சிர் குத்தப்பட்ட தோட்டத் தமிழ் சமூகம் இலங்கை/இந்திய அரசால் நியாயமான மூலதனம் கொடுக்கப்பட்டு புனர் வாழ்விற்காக நாடு கடத்தப்பட்டால், அல்லது அவர்களின் எதிர்காலத்தை சமூகப் பொருளாதார மட்டத்தில் உயர்த்தி தாயகம் திருப்பி குடியமர்த்துமானால் நியாயமே. அதுமட்டுமல்லாது பல வருடங்களுக்கு முன்னர் தமது பெற்றோர் அல்லது பாட்டனார்களால் தாயகம் திரும்பலை மனுச் செய்தவர்கள் இந்த நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தற்போது அச் சமூகத்தின் மூத்தவர்களை இழந்து வாழும் வேளையில் புதிய இளம் சந்ததியினர் பிறிதொரு நாட்டில் இடம்பெயர்ந்து வாழ முயற்சிப்பது அல்லது பணிப்பது முறையற்ற செயல் எனக் கூறுவது தவறில்லை.

இப்படி அவலப்படும் இச் சமூகத்தினை மீட்டெடுக்க உள்ளூர எந்தத் தொழிற்சங்கமும் முன்வரவில்லை. அவர்கள் வெறும் பத்திரிகைச் செய்தியின் விளம்பரத்தில் ஆதாயம் தேடுவதில் மாத்திரம் அக்கறை கொண்டுள்ளனர். தோட்டத் தொழிலாளரின் வருமானத்தின் மாதாந்தம் ரூபா 15 வரை சந்தா அறவிட்டு மாடமாளிகை குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்கள் முழு ஆயுத பாதுகாப்பு என்பன இருக்கும்வரை ஒட்டாண்டியான தொழிலாளர்களில் அவர்களுக்கு உள்ளூர அக்கறையில்லை.

தொழிலாளர் நலனில் சில இடதுசாரிகள் அக்கறை கொண்டாலும் இவர்கள் நசுக்கப்படுகிறார்கள்.

www.tamilarangam.net


இருபதாம் நூற்றாண்டிலும் தோட்டங்களில் கூலியாக வேலை செய்யும் நன்கு படித்த இளைஞர்/யுவதிகளும் இச் சுயநல சக்திகளை மேலும் உரமிட்டு வளர்ப்பது வேதனையே!

இருபதாம் நூற்றாண்டின் எனது இளைய/முத்த தோழர்களே, எமது அடிபணிந்த சமூகம் விழிப்புணர்ச்சி பெற சற்று சிந்தியுங்கள்! இல்லையேல் சீல் வைக்கப்படாமல் எஞ்சியிருக்கும் நாமும் நாளை நாடு கடத்தப்படுவோம்!

A.ஜெயா
மலையகம்.

* * *

காலாகாலமாக இலங்கை மண்ணிலே வாழ்ந்து இந்நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக வாழும் மலையக மக்களின் தாயகம் இலங்கையே!. கட்டுரையாளர் குறிப்பிடுவதுபோல் "அவர்களுக்கு நியாயமான மூலதனம் கொடுக்கப்பட்டு புனர்வாழ்விற்காக நாடுகடத்தப்பட்டால் அல்லது அவர்களின் எதிர்கால சமூக பொருளாதார மட்டத்தை உயர்த்தி 'தாயகம்' திருப்பி குடியமர்த்துமானால் நியாயமே" என்ற கருத்து நியாயமற்றது.

• ஆர்கே •

---


---- 44 ம் பக்கத் தொடர்ச்சி.

சினிமா வியாபாரக் கோட்டைக்குள் புகுந்து அதனை உடைத்தெறிவோம் என்று புறப்பட்டவர்கள் தங்களின் ஆரம்பகால நோக்கங்களையும் இலட்சியங்களையும் தான் உடைத்துக் கொண்டார்கள். திறமையுள்ள பாரதிராஜா போன்ற இயக்குனர்கள் 'ரசிகர்களின்' இன்றைய தேவைகளை நாடிபிடித்து தங்கள் சரக்குகளை விற்பதில் சிறந்த விற்பனையாளர்கள் என்பதில் ஐயமில்லை.

◂ ராகவன் ▸

www.tamilarangam.net






ஐரோப்பாவில் அகதிகளும் நிதி சேகரிப்பும் என்ற கட்டுரையில் பிற்போக்கு கலாச்சார அம்சங்களுக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை வைக்காமலும் தவறான அம்சங்களை அப்பட்டமாக தோலுரித்துக் காட்டாமலும் கூறிச் செல்வது ஆரோக்கியமானதாக இல்லை.

I.P. மூர்த்தி, இந்தியா.

---

பணம்தான் மனிதனின் வாழ்க்கை என்ற இலட்சியத்தில் தான் வெளிநாட்டில் வதியும் பெரும்பாலான தமிழ்மக்கள் சுழன்று கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மத்தியில் "மனிதம்" பல மாற்றங்களை ஏற்படுத்தாவிடினும் ஒரு சில மாற்றங்களையாவது ஏற்படுத்தச் சிந்திக்கத் தூண்டுகிறது. "பிள்ளைகள் நல்ல பழக்கங்கள் பழக வேண்டும்; மற்றவர்களுடன் சேர வேண்டும்" என்ற நியாயப்படுத்தலைக் கூறும் பெற்றோருக்கு மூர்த்தி மாஸ்டர் "சுவிஸ்: சிறுவர் பாடசாலையில் தமிழ்ப் பிஞ்சுகளின் வேதனை" என்ற படைப்பின் மூலம் சிந்தனையை தூண்டுகிறார். வெளிநாட்டில் இருக்கும் எம்போன்ற பலருக்கு "உண்மை விடியல்" எம் நாட்டை கண்முன் நிறுத்துகிறது. "மண்டேலாவுக்கு வாழ்த்து", "இனங்களைமறந்த சுவிஸ் மக்கள்" போன்ற படைப்புக்கள் மூலம் சர்வதேச அரசியலையும் சமுதாய சீர்திருத்தங்களையும் கொண்டுவரும் "மனிதம்" சமுதாயத்தின் பாதியான பெண்ணைப் பற்றியோ, பெண் விடுதலை பற்றியோ எழுதாததின் காரணம் என்ன?

www.tamilarangam.net



இவ்வகை பத்திரிகையிலாவது பெண் விடுதலைக் கருத்துக்களை எதிர்பார்க்கிறோம்.

ர.சசி, இன்ரர்லாக்கன்.

---

தாங்கள் எடுத்துள்ள முயற்சி மிகவும் பாராட்டத்தக்கது. வெளிநாடுகளில் வசிக்கும் தமிழ் வாசகர்களுக்கெனவே பெரிதும் எண்ணி இதனை தாங்கள் வெளியிடுகின்ற போதும், கருத்துச் சுதந்திரம் நசுக்கப்பட்டு எழுதவோ பேசவோ வெளியிடவோ பயந்து வாழுகின்ற எமது இன்றைய (இங்குள்ள) சூழ்நிலையில் இதுபோன்ற சஞ்சிகை எமது கைகளில் கிடைப்பது என்பது என்போன்றவர்களால் மிகவும் விருப்பத்துடன் வரவேற்கப்படும் ஒன்றாகத்தான் இருக்கிறது.

திருமதி க.இரா, கண்டி
இலங்கை.

---

சில தலைவர்கள் எடுக்கும் முடிவுகள் தீர்மானங்கள் விமர்சிக்கப்படும் போது அவர் வாழ்ந்த காலத்தினான சமூக சூழல் நிலைவரங்கள் சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டும். வேறு காலங்களில் (பிந்திய) மாறுபட்ட சூழ்நிலையில் அவை துரோகமாகவும் தீர்க்க தரிசனம் அற்றதாகவும் காணப்படலாம் (அதற்காக எல்லாம் சரி என்பதல்ல). இவற்றை ஏன் எழுதுகிறேன் என்றால் உலகத் தலைவர்கள் எல்லோரையும் எல்லாக் கொள்கைகளையும் கணிக்கும் "மனிதத்தின்" நிலையாலேதான்!. எனவே "மனிதத்தின்" அரசியல் விமர்சனங்களில் பக்குவமான எழுத்து நடையும் ஆழ்ந்த கண்ணோட்டமும் அவசியம்.

சு.சத்தியமூர்த்தி, மே.யேர்மனி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆ-ர் கு: சில தலைவர்களையும் அவர்கள் எடுக்கும் முடிவுகளையும் தீர்மானங்களையும் ஒட்டுமொத்தமாகக் கண்டிக்கும் நோக்கம் "மனிதத்துக்கு" கிடையாது. கட்டுரையாளர்கள் தமக்குரிய பார்வையுடனேயே அவற்றை எழுதுகின்றனர். விமர்சிக்கப்படும்போது நன்மை, தீமைகள் அவர்களின் கால சூழ்நிலைகளில் வைத்து சீர்தூக்கிப் பார்க்கப்படுகின்றன. ஆயினும் பொதுவாக அவர்களது செயல்கள் மனித சமூகத்தை முன்தள்ளிச் செல்கின்றனவா அல்லது பின்தள்ளுகின்றனவா என்பதே அடிப்படையானது.

----16 ம் பக்க தொடர்ச்சி.

ரீதியில் ஆய்வுசெய்து பெண்களின் சுயாதீனமான அமைப்புக்களுக்கூடாக பெண்விடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுக்கும் அதே கட்டத்தில் இந்த ஒடுக்குமுறை வடிவங்களை எல்லாம் கூட்டுமொத்தமாக கட்டிக்காக்கும் சமூக கட்டுமானங்களையெல்லாம் உடைத்தெறிந்து மானுடத்தை நேசிக்கும் சமூகத்தைப் படைக்கும் போராட்டத்தோடு பெண்விடுதலைப் போராட்டமும் இணையும்போதுதான் பெண்விடுதலை என்பது சாத்தியமாகும்.

பெண்விடுதலையில் ஆர்வம் உள்ள ஆண்கள் எல்லோரும் பெண்விடுதலைப் போராட்டத்தில் துணையான பாத்திரமேதவிர பெண்விடுதலையானது சுயாதீனமான பெண்ணமைப்புக்களுக்கு ஊடாக நடாத்தும் போராட்டத்தினூடாகத்தான் முழுமை அடைய முடியும்.

இக் கட்டுரைக்கான முக்கிய குறிப்புக்கள் "மார்க்சமும் பெண்நிலைவாதமும்" என்ற புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டது.

www.tamilarangam.net

# ⋆ காரத்கு வெள்ளி ⋆

விழவு
பாதாளம் நோக்கி
மெல்ல மெல்ல
தவழ்கிறது.

ஏக்கங்களோடு
இறந்தவர்கள்
சமாதிகளிலிருந்து
எழும்பும்
சீழ் வடியும்
உடல்கள்
பின் தொடர ----

பெருங்காற்றால்
முகில்
நிலவை மூடுவதால்
அந்த
இரவுகளில்
இருள் சூழ ----

விழவு
மெல்ல மெல்ல
எமைவிட்டு ----

ஆனந்தி

www.tamilarangam.net



MANITHAM
POSTFACH - 12
3000 BERN - 11
SWITZERLAND

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்